# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 06 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2018.04.11 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகம்

**ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகம் என அறியப்படும் பல்கலைக்கழகமொன்றை தாபிப்பதற்கும், பேணுவதற்கும், நிருவகிப்பதற்கும் ஏற்பாடு செய்வதற்கும்; பல்கலைக்கழக மட்டத்தில் உயர்கல்வியைப் புகட்டுவதற்கும்; கந்தவளை தோட்டத்தையும் அதன் மீதுள்ள அசையும் ஆதனத்தையும் பல்கலைக்கழகத்திற்கு உரித்தாக்குவதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; 1981 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டத்தை நீக்குவதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.**

*பாதுகாப்பு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 84.00** **தபாற் செலவு : ரூபா 20.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை
தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகம்

*ச. வ.- ஓ 4/2009*

**ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகம் என அறியப்படும் பல்கலைக்கழக மொன்றை தாபிப்பதற்கும், பேணுவதற்கும், நிருவகிப் பதற்கும் ஏற்பாடு செய்வதற்கும்; பல்கலைக்கழக மட்டத்தில் உயர்கல்வியைப் புகட்டுவதற்கும்; கந்தவளை தோட்டத்தையும் அதன் மீதுள்ள அசையும் ஆதனத்தையும் பல்கலைக்கழகத்திற்கு உரித்தாக்குவதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; 1981 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டத்தை நீக்குவதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கையின் ஆயுதந்தாங்கிய படைகளிலும் மற்றும் பகிரங்க சேவையிலும் சேவையாற்ற உட்கருதுகின்ற ஆட்களுக்கும் வேறு ஆட்களுக்கும் கல்விசார் மற்றும் உயர்தொழில்சார் தகைமைகளை எய்துவதற்கு கிடைக்கக்கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்துவதன் தேவையும் முக்கியத்துவமும் கருத்திற்கொள்ளப்படுகின்ற தாதலாலும்: முன்னுரை.

அத்துடன் இலங்கையின் ஆயுதந்தாங்கிய படைகள் மற்றும் பகிரங்க சேவையில் சேவையாற்ற உட்கருதுகின்ற அத்தகைய ஆட்களுக்கும் வேறு ஆட்களுக்கும் கல்விசார் மற்றும் உயர் தொழில்சார் தகைமைகளை வழங்கும் நோக்கத்திற்கு பல்கலைக் கழகமொன்றைத் தாபித்தல் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயமொன்றாகியுள்ளதாதலாலும்:

அத்துடன் காலஞ்சென்ற சேர் ஜோன் லயனல் கொத்தலாவலை சிஎச், கேபிஈ, எல்எல்டி அவர்களுக்குச் சொந்தமானதும், அவரது உடைமையிலும் இருந்ததும், கந்தவளை தோட்டம் என அறியப்படுவதுமான காணியையும் வளவுகளையும் குறித்த சில வேறு அசையும் ஆதனங்களையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு முழுமையானதும் அழிக்கப்பட முடியாததுமான கொடையாகவும் கொடைவழியாகவும் அவர் கைமாற்றம் செய்துள்ளார் ஆதலாலும்:

அத்துடன் சொல்லப்பட்ட காணியும் வளவுகளும், அசைவுள்ள ஆதனங்களும், நாட்டுக்கும் இலங்கையின் ஆயுதந்தாங்கிய படைகளில் சேவையாற்ற உட்கருதுகின்ற ஆட்களுக்கு பல்கலைக்கழக மட்டத்தில் உயர்கல்வியை புகட்டுவதற்கும் பயிற்சியளிப்பதற்கும் தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகமொன்றை தாபிக்கும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்பதே சொல்லப்பட்ட காலஞ்சென்ற ஜெனரல் சேர் ஜோன் லயனல் கொத்தலாவலை சிஎச், கேபிஈ, எல்எல்டி அவர்களின் அவாவும் விருப்பமும் ஆக இருந்ததாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

**1.** இச்சட்டம், 2018 ஆண்டின் ஆம் இலக்க, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகள், (இதனகத்துப்பின்னர் “நியமிக்கப்பட்ட தேதி” எனக்குறிப்பீடு செய்யப்படும்) வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கின்றவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் I

## ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தைத் தாபித்தல்

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்புப் பல்கலைக் கழகத்தைத் தாபித்தல்.

**2.** (1) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், (இதனகத்துப்பின்னர் “பல்கலைக்கழகம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகம் என அழைக்கப்படும் பல்கலைக்கழகமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) பல்கலைக்கழகமானது, இடையறாவழியுரிமையுடனும் பொது இலச்சினை ஒன்றுடனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக விருத்தல் வேண்டுமென்பதுடன் உட்பிரிவு (1) இனால் அதற்கு குறித்தொதுக்கப்பட்ட பெயரினால் எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கவும் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம்.

பல்கலைக் கழகத்தின் இலச்சினை.

**3.** (1) பல்கலைக்கழகமானது, பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் அதனைப் பயன்படுத்தவும் முழுத் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பல்கலைக்கழகத்தின் இலச்சினை, பல்கலைக்கழக துணை வேந்தரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டுமென்பதுடன், பல்கலைக்கழக ஆளுநர் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய முறையில் மாற்றவும்படலாம்.

(3) இலச்சினையானது, துணைவேந்தரின் முன்னிலையில் அல்லது துணைவேந்தரினால் குறித்தளிக்கப்பட்ட எவரேனும் வேறு அலுவலரின் முன்னிலையிலன்றி ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது என்பதுடன் விடயத்திற் கேற்ப, துணைவேந்தர் அல்லது அத்தகைய வேறு அலுவலர், தான் சமுகமாயிருந்தார் என்பதற்கு அத்தாட்சியாக அத்தகைய சாசனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

## பாகம் II

### பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்களும் தத்துவங்களும்

பல்கலைக் கழகத்தின் குறிக்கோள்கள்.

**4.** பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) ஆயுதந்தாங்கிய படைகளில் இணைக்கப்படுவதற்கு முன்பதாக ஆயுதம் ஏந்தும் உயர்தொழிலுக்கு அலுவலர் பதவியணிகளை அறிமுகப்படுத்தவும் ஆயுதம் ஏந்தும் உயர்தொழிலில் அவர்களது அறிவு மற்றும் திறமைகளை அபிவிருத்தி செய்வதற்கு அவர்களுக்கு வழிகாட்டு வதற்கும் வசதிகளை வழங்கல்;

(ஆ) அத்தகைய கற்றல் கிளைகளில் அலுவலர் பதவியணிகள், ஆயுதந்தாங்கிய படைகளின் அலுவலர்கள், பகிரங்க சேவையாளர்கள் மற்றும் வேறு ஆட்களுக்கு, அத்தகைய பட்டங்கள், திப்புளோமாக்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புகளை அளிப்பதற்கு இட்டுச் செல்லும் அத்தகைய கற்கைநெறிகளையும் போதனையையும் ஏற்பாடு செய்தல்;

(இ) அலுவலர் பதவியணிகளின் பண்பு, தன்னம்பிக்கை மற்றும் தலைமைப்பண்புகளை அபிவிருத்தி செய்வதற்கு அவர்களுக்கு மத்தியில் தோழமை உணர்ச்சியையும் நல்லெண்ண உணர்ச்சியையும் வளர்த்தல் மற்றும் அவர்களுக்கிடையே புரிந்துணர்வை மேம்படுத்தல்; அத்துடன்

(ஈ) அத்தகைய கற்கைநெறிகளை பின்பற்றுவதற்கு அலுவலர் பதவியணிகள், அலுவலர்கள், பகிரங்க அலுவலர்கள் மற்றும் வேறு ஆட்களை சேர்த்தல் மற்றும் அத்தகைய கற்கைநெறிகளிலும் அத்தகைய கற்றல் கிளைகளிலும் பெறப்பட்ட தேர்ச்சியை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக பரீட்சைகளை நடாத்துதல்.

பல்கலைக் கழகத்தின் தத்துவங்களும் பணிகளும்.

**5.** பல்கலைக்கழகமானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) அத்தகைய கற்கைநெறிகள் மற்றும் போதனைகளை பின்பற்றுவதற்கு ஆயுதந்தாங்கிய படைகளின் அலுவலர் பதவியணிகள் மற்றும் அலுவலர்கள், பகிரங்க அலுவலர்கள் மற்றும் வேறு ஆட்களை சேர்த்தல்;

(ஆ) அலுவலர் பதவியணிகளுக்கு அடிப்படையான சேவைப் பயிற்சியொன்றை வழங்குதல்;

(இ) அலுவலர் பதவியணிகள், அலுவலர்கள், பகிரங்க அலுவலர்கள் மற்றும் வேறு ஆட்களுக்கு இயைபாகவிருக்கும் அத்தகைய பாடங்களில் கல்விசார் கற்கைகளில் வசதிகளையும் போதனைகளையும் வழங்குதல்;

(ஈ) ஒழுங்குவிதிகளால் விதித்துரைக்கப்படக்கூடியவாறாக பாதுகாப்பு மற்றும் அத்தகைய வேறு கல்விசார் துறைகள் தொடர்பாக அத்தகைய கற்றல் கிளைகளில், பிரிவு 19 (1)(ஆ) இன் கீழ் அங்கீகரிக்கப்படக்கூடியவாறாக பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புக்களை வழங்குவதற்கு இட்டுச்செல்லும் கற்கைநெறிகளையும், பயிற்சியையும் போதனைகளையும் ஏற்பாடு செய்தல்;

(உ) அலுவலர் பதவியணிகள், ஆயுதந்தாங்கிய படைகளின் அலுவலர்கள், பகிரங்க அலுவலர்கள் மற்றும் வேறு ஆட்களினால் அத்தகைய கற்கைநெறிகளிலும் அத்தகைய கற்கை கிளைகளிலும் செயல்நிறைவேற்றுகையை மதிப்பீடு செய்யும் நோக்கத்துக்காகவும் பெறப்பட்ட தேர்ச்சியை நிச்சயிக்கும் நோக்கத்துக்காகவும் பரீட்சைகளை நடாத்துதல்;

(ஊ) பாதுகாப்பு மற்றும் எவையேனும் வேறு கற்றல் கிளைகள் தொடர்பான ஆராய்ச்சிக்கும் அறிவின் வளர்ச்சிக்கும் அதனைப் பரப்புவதற்குமான வாய்ப்புகளை ஏற்பாடு செய்தல்;

(எ) பல்கலைக்கழகத்தின் மேற்பார்வையின் கீழும் அதனால் விதிக்கப்பட்ட கட்டளைக் கற்களுக்கு இணங்கவும் வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இராணுவப் பயிற்சி நிறுவகங்கள் அல்லது இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட வேறு கல்விசார் நிறுவகங்களினால் நடாத்தப்பட்ட கற்கைநெறிகளை ஏற்று அங்கீகரித்தல் மற்றும் அத்தகைய கற்கைநெறிகளுக்காக பட்டங்களை அளித்தல்;

(ஏ) பல்கலைக்கழகத்தின் நோக்கங்களுக்காக தேவைப் படுத்தப்பட்டவாறாக தொழில்நுட்ப, தொழில்சார் அல்லது உயர்தொழில்சார் நிறுவனங்கள் உள்ளடங்கலாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உயர்கல்விசார் நிறுவனங்களுடன் இணைதல்;

(ஐ) கல்விசார்மற்றும் உயர்தொழில்சார் உட்பட எவையேனும் கற்கைநெறிகள், பயிற்சி மற்றும் போதனைகளை பொதுமக்களுக்கு அல்லது ஏதேனும் நிறுவனத்துக்கு வழங்குவதற்காக கட்டணங்களை அறவிடுதல் மற்றும் ஏதேனும் கட்டளைச் சட்டத்தினால் விதித்துரைக்கப்பட வேண்டியவாறான அத்தகைய முறையில் பல்கலைக் கழகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக அவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட வருமானத்தை செலுத்தீடு செய்தல்;

(ஒ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் பிரிவு 128 இன் ஏற்பாடுகளில் முரணாக வுள்ளது எது எவ்வாறிருப்பினும் பல்கலைக்கழகத்தில் அத்தகைய கற்றல் கிளைகளில் கற்கைநெறிகளை பின்பற்றியுள்ளவர்களும் அத்தகைய நோக்கத்துக்காக ஆக்கப்பட்ட ஏதேனும் நியதிச்சட்டத்துக்கு இசைந்தொழுக அத்தகைய பரீட்சைகளில் சித்தி எய்தியவர்களுமான அலுவலர் பதவியணிகள், ஆயுதந் தாங்கிய படைகளின் அலுவலர்கள், பகிரங்க அலுவலர்கள் மற்றும் வேறு ஆட்களுக்கு பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புக்களை வழங்குதல் மற்றும் அளித்தல்;

(ஓ) அத்தகைய நோக்கத்துக்காக ஆக்கப்பட்ட ஏதேனும் நியதிச்சட்டத்துக்கு இசைந்தொழுக ஆளுநர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்களுக்குக் கௌரவ பட்டங்களையும் வேறு கல்விசார் சிறப்புக்களையும் அளித்தல்;

(ஔ) பல்கலைக்கழகத்தின் நோக்கங்களுக்கென சட்டத்திற்கு ஏற்ப போதனா வைத்தியசாலைகள், நூலகங்கள், மருத்துவ மற்றும் வேறு ஆய்வுகூடங்கள் அத்துடன் வேறு கட்டடங்களையும் வசதிகளையும் நிறுவுதல், சாதனமிடுதல் மற்றும் பேணுதல்;

(க) பல்கலைக்கழகத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக் கூடியவாறாக சிரேட்ட பேராசிரியர் பதவிகள், பேராசிரியர் பதவிகள், இணைப் பேராசிரியர் பதவிகள், சிரேட்ட விரிவுரையாளர் பதவிகள், விரிவுரையாளர் பதவிகள் மற்றும் வேறு கல்வி சார் மற்றும் கல்விசாரா பதவிகள் என்பவற்றை தாபித்தல்;

(ங) அத்தகைய நோக்கத்துக்காக ஆக்கப்பட்ட ஏதேனும் நியதிச்சட்டத்திற்கு இசைந்தொழுக, ஆதரவூதியங்களையும், புலமைப்பரிசில்களையும், புலமைப் பொருளுதவிகளையும், உதவிப்பணங்களையும் பதக்கங்களையும் மற்றும் வேறு பரிசுகளையும் தாபித்தல் மற்றும் அளித்தல்;

(ச) பல்கலைக்கழகத்தினால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான வளாகங்கள், கல்லூரிகள், பீடங்கள், திணைக்களங்கள், நிலையங்கள், கல்விசார் நிறுவனங்கள் மற்றும் அத்தகைய வேறு விசேடத்துவமான நிறுவகங்கள், பாடசாலைகள் மற்றும் பிரிவுகளைத் தாபித்தல்;

(ஞ) பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்களை அல்லது அக்கறைகளையொத்த அல்லது பொருளளவில் அவற்றை ஒத்த குறிக்கோள்களை அல்லது அக்கறைகளைக் கொண்ட உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள வேறு நிறுவனங்களுடன் விரிவுரையாளர்களையும் மாணவர்களையும் கல்விமான்களையும் பரிமாற்றுதல் என்ற வகையாக அல்லது வேறுவகையில் ஒத்துழைத்தல்;

(ட) தகவல், அறிவு மற்றும் வளங்களைப் பரப்புதல் மற்றும் பகிர்தல் உள்ளடங்கலாக பல்கலைக்கழகத்தின் நோக்கத்திற்கென வேறேதேனும் நிறுவனம், அரசாங்கம் மற்றும் தனியாளுடன் இணைதல்;

(ண) பல்கலைக்கழகத்தினால் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆட்களுக்கு உயர்கல்விக்கான வசதிகளை வழங்குதல்;

(து) அத்தகைய நோக்கத்திற்கென ஆக்கப்பட்ட ஏதேனும் நியதிச்சட்டத்திற்கு இசைந்தொழுக ஆளுநர் சபையால் அங்கீகரிக்கப்பட்டவாறு, மாணவர்களைப் பல்கலைக் கழகத்திற்கு சேர்க்கும் நோக்கத்திற்கென, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப் பட்டிருப்பதாகக் கருதப்படும் ஏதேனும் பல்கலைக் கழகத்திலும் மற்றும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டில் உள்ள ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்திலும் தொழில்நுட்ப, தொழில்சார் அல்லது உயர்தொழில்சார் நிறுவனத்திலும் ஆட்களால் சித்தியடைந்த பரீட்சை களையும் பின்பற்றப்பட்ட கற்றல் காலப்பகுதியையும் ஏற்று அங்கீகரித்தல்;

(நு) உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்து மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடை களைப் பெறுதல்;

(பு) இச்சட்டத்தினால் பல்கலைக்கழகத்திற்கு உரித்தாக்கப் பட்டதாக வரக்கூடிய அல்லது ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையுதிர்ப்பின் பயனாக அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்பட்டதாக வரக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எடுத்தல் அல்லது வைத்திருத்தல் மற்றும் அத்தகைய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை விற்றல், ஈடுவைத்தல், குத்தகைக்குக் கொடுத்தல், மானியக்கொடையாகக் கொடுத்தல், உரித்து மாற்றல் மரணசாசனம் மூலம் கையளித்தல், சாட்டுதல், கொடுத்து மாற்றுதல் அல்லது வேறுவகையாகக் கையுதிர்த்தல்:

ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய ஏதேனும் ஆதனத்தின் ஏதேனும் விற்பனை, அடைமானம், குத்தகை, கொடுத்துமாற்றுகை அல்லது வேறு கையுதிர்ப்பு, அத்தகைய ஏதேனும் ஆதனம் பல்கலைக்கழகத்துக்கு எந்த சட்டத்தால் அல்லது ஏதேனும் தோதான சாதனம்

அல்லது கட்டளையால் உரித்தாக்கப்பட்டதோ அந்த சட்டம் அல்லது ஏதேனும் தோதான சாதனம் அல்லது கட்டளையால் விதிக்கப்பட்ட ஏதேனும் மட்டுப்பாடு, நிபந்தனை அல்லது தடைக்கு மீறுதலாக அது செய்யப் பட்டிருப்பின் செல்லுபடியற்றதாதல் வேண்டும்;

(ம) பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் பல்கலைக்கழகத்தினால் நேரடியாகவோ அல்லது அதன் சார்பாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் ஊடாகவோ அல்லது முகவர் ஊடாகவோ செய்து கொள்ளல் மற்றும் புரிதல் அல்லது நிறைவேற்றல்;

(ய) பல்கலைக்கழகத்தின் நோக்கங்களுக்காக, ஆளுநர் சபை தகுந்ததெனக் கருதக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய பிணையத்தின் மீதும் பணம் கடன் பெறுதல் அல்லது பணம் திரட்டுதல்;

(ர) பல்கலைக்கழகத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய ஊழியர்களையும் முகவர்களையும் நியமித்தல் மற்றும் அத்தகைய ஊழியர்கள் மற்றும் முகவர்களுக்கு ஊதியமளித்தல்;

(ல) ஆளுநர் சபை தகுந்ததெனக் கருதுகின்றவாறான அத்தகைய முறையில் பல்கலைக்கழகத்தின் நிதிகளை முதலீடு செய்தல்; அத்துடன்

(வ) இச்சட்டத்தால் அளிக்கப்பட்ட தத்துவங்களுள் எவற்றையும் பயனுறுதியுடன் பிரயோகிக்கவும் பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் எய்துவதற்கும் அவசியப்படக்கூடியவாறான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் அல்லது காரியங்களையும் செய்தல்.

## பாகம் III

### அமைச்சரின் தத்துவங்கள்

அமைச்சரின் பொறுப்பு மற்றும் தத்துவங்கள்.

**6.** (1) அமைச்சர் இச்சட்டத்தின் பொதுப் பணிப்புக்கும் நிருவாகத்திற்கும் பொறுப்பானவராகவிருத்தல் வேண்டும்.

(2) அமைச்சர் அவர் அவசியமானவை எனக் கருதக்கூடிய வாறான கருமங்கள் தொடர்பில் அத்தகைய எழுத்திலான பணிப்புக்களைக் காலத்திற்குக்காலம் ஆளுநர்சபைக்கு வழங்கலாம். இவ்வுட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட எழுத்திலான பணிப்பு ஒவ்வொன்றும் அதனது வழங்குகைத் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் பாராளுமன்றத்தில் இடப்படுதல் வேண்டும்.

(3) அமைச்சரால் (2) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட எல்லாப் பணிப்புகளுடனும் இணங்கியொழுகுதல் ஆளுநர்சபையின் கடமையாதல் வேண்டும்.

(4) அமைச்சர், பல்கலைக்கழகத்துடன் இணைந்த நிறுவகங்களின் நிரல் ஒன்றை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு சபைக்கு காலத்துக்குக்காலம் பணிக்கலாம்.

தேசிய பாதுகாப்பு முதலியனவின் போது அமைச்சர் பணிப்புக்களை வழங்குதல்.

**7.** பல்கலைக்கழகத்தில் நிலவுகின்ற ஏதேனும் நிலைமை, தேசிய பாதுகாப்பிற்கு அபாயம் ஏற்படுத்தும் சாத்தியம் கொண்டதாக வுள்ளது அல்லது தேசிய கொள்கைக்கு தீங்குவிளைவிக்கக்கூடியது அல்லது பங்கம்விளைவிக்கக்கூடியது அல்லது பல்கலைக் கழகத்தின் சீரான பணியாற்றுகையைக் குலைக்கும்சாத்தியம் கொண்டது என அமைச்சர் கருதுமிடத்து, அத்தகைய நிலைமையைக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவருவதற்கு அவசியமானது என அவர் கருதக்கூடியவாறான அத்தகைய எல்லா நடபடிகளையும் எடுக்கும் படி ஆளுநர் சபையை அவர் பணிக்கலாம்.

ஆண்டறிக்கை.

**8.** பிரிவு 18 இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளுநர் சபை, ஒவ்வொரு நிதியாண்டினதும் முடிவின் பின்னர் ஆறு மாதங்களைக் கொண்ட வொரு காலப்பகுதி முடிவுறுவதற்கு முன்னர், அவ்வாண்டின் போது அதன் செயற்பாடுகள் பற்றிய முழுமையான விபரத்தை கொண்டுள்ள அறிக்கையொன்றைஅமைச்சரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அமைச்சர் அதன் பிரதிகள் பாராளுமன்றத்தில் இடப்படுவதை செய்வித்தல் வேண்டும்.

## பாகம் IV

### பல்கலைக்கழகத்தின் வேந்தரும் அலுவலர்களும்

**9.** (1) சனாதிபதியினால் நியமிக்கப்படவேண்டிய (இதனகத்துப் பின்னர் "வேந்தர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பல்கலைக் கழகத்தின் வேந்தரொருவர் இருத்தல் வேண்டும். *பல்கலைக் கழகத்தின் வேந்தரும், அலுவலர்களும்.*

(2) வேந்தர், பல்கலைக்கழகத்தின் பெயரளவான தலைவராதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய நியமனத் தேதியிலிருந்து ஐந்தாண்டு காலப்பகுதியொன்றிற்கு பதவி வகித்தலும் வேண்டும்.

(3) வேந்தர், 25 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடு களுக்கமைவாக, சமூகமாயுள்ளபோது பல்கலைக்கழகத்தின் ஏதேனும் பட்டமளிப்புவிழாவில் தலைமைதாங்குதல் வேண்டும்.

(4) இறப்பின் மூலம், சனாதிபதிக்கு முகவரியிடப்படும் பதவி விலகலின் மூலம் அல்லது சனாதிபதியால் பதவி நீக்கப்படுவதன் மூலம் வேந்தர் பதவி வெற்றிடம் ஏற்படும் பட்சத்தில், அத்தகைய வேந்தரை அடுத்துறுவதற்கு நியமிக்கப்பட்ட ஆள், தனது முன்னிருந்தவரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கென வேந்தரின் பதவியை வகிக்கலாம்.

(5) பல்கலைக்கழகத்தின் வேறு அலுவலர்கள் பின்வருவோராக இருத்தல் வேண்டும்:-

(அ) துணைவேந்தர்;

(ஆ) வளாகங்களின் வளாகத் தலைவர்;

(இ) பிரதித் துணை வேந்தர் (பாதுகாப்பு மற்றும் நிருவாகம்);

(ஈ) பிரதித் துணை வேந்தர் (கல்விசார்);

(உ) ஒவ்வொரு பீடத்தினதும் பீடாதிபதி;

(ஊ) தலைமையக படையணியின் கட்டளையிடும் அலுவலர்;

(எ) படைத்துறைப் பணியாளர்;

(ஏ) பதிவாளர்;

(ஐ) நூலகர்; அத்துடன்

(ஒ) பொருளகர்.

துணைவேந்தர்.

**10.** (1) சனாதிபதி, பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக ஆயுதந்தாங்கிய படைகளின் சிரேட்ட அலுவலரொருவரை நியமித்தல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கத்துக்காக ஆயுதந்தாங்கிய படைகளின் அத்தகைய சிரேட்ட அலுவலர், இலங்கைத் தரைப்படை, இலங்கை கடற்படை மற்றும் இலங்கை வான்படையிலிருந்து சுற்றுமுறையில் முறையே நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) துணைவேந்தர் பல்கலைக்கழகத்தின் முழுநேர அலுவலரொருவராக இருத்தல் வேண்டுமென்பதுடன், அதன் பிரதான நிறைவேற்று மற்றும் நிருவாக அலுவலராகவும் பிரதான கல்விசார் அலுவலராகவும் இருத்தல் வேண்டும். துணைவேந்தர் பல்கலைக்கழகத்தின் ஏதேனும்பணியாற்றுகைசார் உறுப்பு அல்லது வேறு குழுமத்தின் ஏதேனும் கூட்டத்தை கூட்டுவதற்கும் அதில் சமூகமளிப்பதற்கும் உரையாற்றுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

(4) ஆளுநர் சபையால் அதுசார்பில் துணைவேந்தருக்கு சட்டமுறையாக வழங்கப்பட்ட அத்தகைய பணிப்புகளுக்கிணங்க இச்சட்டத்தினதும் இச்சட்டத்தின் கீழும் ஆக்கப்பட்ட ஏதேனும் துணைநிலைச்சட்டவாக்கத்தின் ஏற்பாடுகள் அவரால் தத்துவங்கள் பிரயோகிக்கப்படும் முறையாகக் கடைப்பிடிக்கப்படுவதை உறுதிப்படுத்துவது அவரது கடமையாதல் வேண்டும்.

(5) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய ஆளுநர் சபையினது முடிபுகளுக்குப் பயன்கொடுப்பதும் பயன்கொடுக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதும் துணைவேந்தரின் கடைமையாதல் வேண்டும்.

(6) (அ) துணைவேந்தர் பல்கலைக்கழகத்தின் கணக்கீட்டு அலுவலராதல் வேண்டும்;

(ஆ) துணைவேந்தர் பல்கலைக்கழகத்தினுள் ஒழுக்காற்றைப் பேணுவதற்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் எவரேனும் பதவியணி அலுவலர் அல்லது எவரேனும் மாணவர் அல்லது பல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதியின் எவரேனும் உறுப்பினராலான ஒழுக்காற்று மீறுகையின் குற்றச்சார்த்துதல்கள் மீது விசாரணையொன்று நடாத்தப்படுவதற்கு பணிக்கலாம்;

(இ) ஆளுநர் சபையானது, அத்தகைய ஒழுக்காற்று விசாரணை தொடர்பில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையை கட்டளைச்சட்டம் மூலம் விதித்துரைக்கலாம்.

(7) துணைவேந்தர், அவர் இறப்பு, இளைப்பாறுதல் அல்லது இடமாற்றம் மூலம் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய மூன்று ஆண்டுகள் கொண்ட காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன் மீள நியமிக்கப்படவும் தகவுடையவராதல் வேண்டும். ஆளெவரும் இரு தடவைகளுக்கு மேல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக நியமிக்கப்படுதல் ஆகாது.

(8) துணைவேந்தர் ஆளுநர் சபையூடாக சனாதிபதிக்கு அதுசார்பில் முகவரியிடப்பட்ட எழுத்திலான தொடர்பாடல் மூலம் துணைவேந்தராக தனது பதவியிலிருந்து பதவி விலகலாம்.

(9) துணைவேந்தர், குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக, சனாதிபதியால் பதவியிலிருந்து நீக்கப்படலாம்.

(10) துணைவேந்தர் லீவு, சுகவீனம், இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்திற்காகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதிருக்குமிடத்து, சனாதிபதி அப்பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கு தகுந்ததென அவர் கருதுகின்றவாறான அத்தகைய ஒழுங்கேற்பாடுகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்கேற்பாடுகள் செய்யப்படும்வரையில் பல்கலைக்கழகத்தின் பிரதித் துணைவேந்தர் (பாதுகாப்பு மற்றும் நிருவாகம்) துணை வேந்தரின் பதவிக்குரிய வழமையான கடமைகளைப் புரிதல் வேண்டும்.

(11) துணைவேந்தரின் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்படுமிடத்து, சனாதிபதியானவர் நிரந்தரமான நியமனமொன்று செய்யப்படும் வரையில் அந்தப் பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கு தகுந்ததென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய ஒழுங்கேற்பாடுகளைச் செய்யலாம். அத்தகைய ஒழுங்கேற்பாடுகள் செய்யப்படும்வரையில், பல்கலைக்கழகத்தின் பிரதித் துணைவேந்தர் (பாதுகாப்பு மற்றும் நிருவாகம்) துணைவேந்தரின் வழமையான கடமைகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

(12) உட்பிரிவு (10) இன் நோக்கத்துக்காக துணைவேந்தரொருவர் சனாதிபதியால் நியமிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய துணைவேந்தர் தனது பதவியிலிருந்து இளைப்பாறினால் அல்லது தனது பதவியை துறத்தாலேயொழிய தனது முன்னிருந்தவரின் பதவிக் காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு பதவிவகித்தல் வேண்டும்.

(13) இப்பிரிவின் நோக்கங்களுக்காக,"ஆயுதந்தாங்கிய படைகளின் சிரேட்ட அலுவலர்" என்ற சொல்லமைப்பு என்பது —

(i) இலங்கைத் தரைப்படையின் விடயத்தில், மேஜர் ஜெனரல் பதவி வரிசைக்கு குறையாத அலுவலர்;

(ii) இலங்கை கடற்படையின் விடயத்தில், ரியர் அட்மிரல் பதவி வரிசைக்கு குறையாத அலுவலர்; அத்துடன்

(iii) இலங்கை வான்படையின் விடயத்தில், எயார் வைஸ் மார்ஷல் பதவி வரிசைக்குக் குறையாத அலுவலர் எனப் பொருள்படும்.

**11.** (1) பல்கலைக்கழகத்தின் வளாகமொன்றில் ஆளுநர் சபையால் நியமிக்கப்படவேண்டிய வளாகத்தலைவர் ஒருவர் இருத்தல் வேண்டும்.

*வளாக மொன்றின் வளாகத் தலைவர்.*

(2) வளாகத்தலைவர், வளாகமொன்றின் கல்விசார் மற்றும் நிருவாகத் தலைவராகவிருத்தல் வேண்டும்.

**12.** (1) பிரதித்துணைவேந்தர் (பாதுகாப்பு மற்றும் நிருவாகம்) நிறைவேற்று மற்றும் நிருவாகப் பணிகளை நிறைவேற்றுவதில் துணைவேந்தருக்கு உதவுதல் வேண்டும்.

*பல்கலைக் கழகத்தின் பிரதித் துணை வேந்தர்.*

(2) பிரதித்துணைவேந்தர் (கல்விசார்) பல்கலைக்கழகத்தின் கல்விசார் பணிகளை நிறைவேற்றுவதில் துணைவேந்தருக்கு உதவுதல் வேண்டும்.

**13.** (1) ஒவ்வொரு பீடத்துக்கும் பீடாதிபதியொருவர் இருத்தல் வேண்டும்; அவர் அப்பீடத்தின் கல்விசார் தலைவராகவிருத்தல் வேண்டும். பீடாதிபதி, ஆளுநர் சபையின் அங்கீகாரத்துடன் துணைவேந்தரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

*ஒரு பீடத்தின் பீடாதிபதி.*

(2) பீடாதிபதி இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் துணை நிலைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, அவரது நியமனத்திகதியிலிருந்து கணக்கிடப்படும் வகையில் மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்கு பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய பதவிவகித்தலிலிருந்து தகைமையிழந்தாலன்றி மேலும் மூன்றாண்டுகாலப்பகுதியொன்றுக்கு மீள நியமிக்கப்படுவதற்கு தகவுடையவராதலும் வேண்டும்.

(3) பீடாதிபதி லீவு, சுகவீனம், இலங்கையில் இல்லாமை அல்லது வேறு ஏதேனும் காரணத்திற்காக மூன்று மாதங்களை விஞ்சாத வொரு காலப்பகுதிக்கு அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிய இயலாதிருக்குமிடத்து, துணைவேந்தர் அத்தகைய காலப்பகுதிக்கு பீடாதிபதியின் பதவியில் பதிற் கடமையாற்றுவதற்கென ஆளுநர் சபையின் அங்கீகாரத்துடன் ஆள் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(4) ஒரு பீடத்தின் பீடாதிபதி அகற்றப்படுமிடத்து, இளைப்பாறு மிடத்து, பதவியிலிருந்து நீங்குமிடத்து அல்லது வேறேதேனும் காரணத்துக்காகத் தமது கடமைகளைப் புரிவதற்கு இயலாதவராக விருக்குமிடத்து, துணைவேந்தர் ஆளுநர் சபையின் அங்கீகாரத்துடன் பீடாதிபதியொருவரை நியமித்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு நியமிக்கப்பட்ட பீடாதிபதி அவரது முன்னிருந்தவரின் பதவிக் காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு பீடாதிபதியின் பதவியை வகித்தலும் வேண்டும்.

பல்கலைக் கழகத்தின் படைத்துறைப் பணியாளர்.

**14.** (1) பல்கலைக்கழகத்திற்கு படைத்துறைப் பணியாளர் ஒருவர் இருத்தல் வேண்டும்; அவர் ஆளுநர் சபையால் நியமிக்கப்பட்ட லெப்டினன்ட் கேர்ணல் பதவி வரிசையில் உள்ள இலங்கைத் தரைப்படை அலுவலர் ஒருவராகவிருத்தல் வேண்டும்.

(2) படைத்துறைப் பணியாளர் பல்கலைக்கழகத்தின் முழுநேர அலுவலர் ஒருவராகப் பணியாற்றுதல் வேண்டும்

(3) படைத்துறைப் பணியாளர்:-

(அ) துணைவேந்தரின் பணிப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கு அமைய, பல்கலைக்கழகத்தில் அலுவலர் பதவியணிகள் மற்றும் சேவை ஆளணியினரின் ஒழுக்காற்றைப் பேணுவதற்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்;

(ஆ) பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்து வதற்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்;

(இ) நிலையியற் கட்டளைகளை தயாரித்தல் மற்றும் அமுலாக்கலுக்கென பொறுப்பாகவிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஈ) ஆயுதத் தொகுதி, வெடிபொருட்கள் மற்றும் படைக் கலங்கள் மற்றும் போர்க்கலத் தொகுதிக்கு பொறுப் பதிகாரியாக இருத்தல் வேண்டும்.

பல்கலைக் கழகத்தின் பதிவாளர்.

**15.** (1) பல்கலைக்கழகத்தின் பதிவாளர், கட்டளைச்சட்டத்தால் விதித்துரைக்கப்படவேண்டிய அமைப்பைக் கொண்டமைந்த தெரிவுக்குழுவொன்றின் விதப்புரையின்மேல் ஆளுநர் சபையால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) பதிவாளர், பல்கலைக்கழகத்தின் முழுநேர அலுவலரொருவராகப் பணியாற்றுதல் வேண்டும்.

(3) பதிவாளர்-

(அ) துணைவேந்தரின் பணிப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கு அமைவாக, பல்கலைக்கழகத்தின் பதிவாளர் பதவியில் நிருவாகத்திற்கு பொறுப்பாகவிருத்தல் வேண்டும்;

(ஆ) பிரிவு 14 (3) (ஈ) இல் குறிப்பீடு செய்யப்படும் வெடிபொருட்கள் மற்றும் படைக்கலங்கள் மற்றும் போர்க் கலத்தொகுதி உள்ளடங்கலாக, பல்கலைக்கழகத்தின் பதிவேடுகளின் கட்டுக்காப்பு மற்றும் ஆதனத்திற்கு பொறுப்பாகவிருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) இச்சட்டத்தின்கீழ் அவருக்கு அளிக்கப்படும் அல்லது விதிக்கப்படும் அல்லது குறித்தளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தலும், புரிதலும் மற்றும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

பல்கலைக் கழகத்தின் பொருளகர்.

**16.** (1) பல்கலைக்கழகத்தின் பொருளகர், கட்டளைச்சட்டத்தினால் விதித்துரைக்கப்பட வேண்டியவாறான அமைப்பைக் கொண்டமைந்த தெரிவுக் குழுவொன்றின் விதப்புரையின்மேல் ஆளுநர் சபையினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) பொருளகர், பல்கலைக்கழகத்தின் முழுநேர அலுவலரொருவராகப் பணியாற்றுதல் வேண்டும்.

(3) பொருளகர்-

(அ) துணைவேந்தரின் பணிப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கு அமைவாக, பல்கலைக்கழகத்தின் நிதிமீதான பொதுவான நிருவாகத்திற்கு பொறுப்பாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் கட்டளைச்சட்டத்தால் விதித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் அதனது கணக்குகளை பேணுதல் வேண்டும்;

(ஆ) பல்கலைக்கழகத்தின் பொது நிதிகளின் கட்டுக்காப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) இச்சட்டத்தினால் அவருக்கு அளிக்கப்படும் அல்லது விதிக்கப்படும் அல்லது குறித்தளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தலும், புரிதலும் மற்றும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

பல்கலைக் கழகத்தின் நூலகர்.

**17**. (1) பல்கலைக்கழகத்தின் நூலகர், கட்டளைச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படவேண்டியவாறான அமைப்பைக் கொண்டமைந்த தெரிவுக் குழுவொன்றின் விதப்புரையின்மேல் ஆளுநர் சபையினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) நூலகர், பல்கலைக்கழகத்தின் முழுநேர அலுவலரொருவராகப் பணியாற்றுதல் வேண்டும்.

(3) நூலகர்-

(அ) துணைவேந்தரின் பணிப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கு அமைவாக, பல்கலைக்கழகத்தின் நூலகம் அல்லது நூலகங்களின் நிருவாகத்திற்கு பொறுப்பாகவிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தினால் அவருக்கு அளிக்கப்படும் அல்லது விதிக்கப்படும் அல்லது குறித்தளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தலும், புரிதலும் மற்றும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

## பாகம் V

## பல்கலைக்கழகத்தின் ஆளும் அதிகாரசபை மற்றும் பணியாற்றுகைசார் உறுப்புகள்

*பல்கலைக் கழகத்தின் ஆளுநர் சபை.*

**18.** (1) (இச்சட்டத்தில், இதனகத்துப்பின்னர் “சபை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆளுநர் சபை, பல்கலைக்கழகத்தின் ஆளும் அதிகார சபையாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் சபை, இச்சட்டத்தினதும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் துணைநிலைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளுக்கமையவும், இச்சட்டத்தால் பல் கலைக்கழகத்துக்கு அளிக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட அல்லது குறித்தளிக்கப்பட்ட எல்லாத் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தலும், புரிதலும் மற்றும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) சபை பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பாதுகாப்பு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்;

(ஆ) பாதுகாப்பு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுக்கான மேலதிக செயலாளர்;

(இ) பிரதம பாதுகாப்புப் பணியாட்டொகுதி;

(ஈ) இலங்கைத் தரைப்படைத் தளபதி;

(உ) இலங்கை கடற்படைத் தளபதி;

(ஊ) இலங்கை வான்படைத் தளபதி;

(எ) பல்கலைக்கழகத் துணைவேந்தர்;

(ஏ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நியமத்தர் ஒருவர்; அத்துடன்

(ஐ) பொதுத் திறைசேரிக்கான செயலாளரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பொதுத் திறைசேரியின் பிரதிநிதி யொருவர்.

(3) பாதுகாப்பு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் சபையின் தவிசாளராதல் வேண்டும்; அவர் சபையின் எல்லாக் கூட்டங்களிலும் தலைமைவகித்தல் வேண்டும். தவிசாளர் ஏதேனும் கூட்டத்தில் தலைமைதாங்க இயலாதவராக இருப்பாராயின், அத்தகைய அமைச்சுக்கான மேலதிக செயலாளர் அத்தகைய கூட்டத்தில் தலைமைவகித்தல் வேண்டும்.

(4) பல்கலைக்கழகத்தின் பதிவாளர் சபையின் செயலாளராகப் பணியாற்றுதல் வேண்டும்.

(5) சபையின் கூட்டமொன்றிற்கான கூட்டநடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(6) அத்தகைய ஒவ்வொரு கூட்டத்திலும் உட்பிரிவு (2) இன் பந்திகள் (ஈ), (உ) மற்றும் (ஊ) இல் குறிப்பீடுசெய்யப்படும் இலங்கையின் ஆயுதந்தாங்கிய படைகளின் எவரேனும் தளபதிகள் இருவர் சமுகமாகவிருத்தல் வேண்டும்.

(7) சபையானது அது அவசியமானதெனக் கருதும் போதிலெல்லாம் கூடுதல் வேண்டும். ஆயின், அது ஒவ்வொரு ஆண்டிலும் ஆறு தடவைகளுக்கு குறையாமல் கூடுதல் வேண்டும்.

(8) சபையின் செயல், முடிபு அல்லது நடவடிக்கைகள் எதுவும் அதனது உறுப்பினர்களிடையேயான வெற்றிடமொன்று உள்ளது என்ற காரணத்தினால் மட்டும் வலிதற்றதாதலாகாது.

சபையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள்.

**19.** (1) பிரிவு 18 இனால் அதற்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, சபையானது பின்வரும் தத்துவங்களையும், கடமைகளையும் மற்றும் பணிகளையும் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் மற்றும் புரிதலும் வேண்டும்:-

(அ) பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களை சேர்த்தலுக்கான தேவைப்பாடுகளை காலத்துக்குக்காலம் தீர்மானித்தல்;

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் கட்டளைச்சட்டம்மூலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அல்லது விதித்துரைக்கப்படக்கூடியவாறான போதனை நியமங்களைவிட குறைவாக இராத அத்தகைய போதனை நியமங்களுக்கு இசைந்தொழுக பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புகளை வழங்குவதற்கு இட்டுச்செல்லும் கற்கைநெறிகளையும் பயிற்சியையும் அங்கீகரித்தல்;

(இ) பல்கலைக்கழகத்திற்கென படைகளின் உடையொன்றைத் தெரிவுசெய்தல் மற்றும் அதனது வடிவத்தைத் தீர்மானித்தல்;

(ஈ) பல்கலைக்கழகத்தின் நிதிசார் தேவைகளை காலத்துக்குக் காலம் விசாரணை செய்தல் அல்லது புலனாய்வு செய்தல்;

(உ) பல்கலைக்கழகத்திற்கான கூட்டிணைக்கப்பட்ட தந்திரோபாயத் திட்டங்கள் மற்றும் நேரொத்த வரவு செலவுத்திட்டங்களை காலத்துக்குக்காலம் அங்கீகரித்தல்;

(ஊ) பல்கலைக்கழக பணியாட்டொகுதி உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படவேண்டிய ஊதியத்தின் அளவு மற்றும் பணியாட்டொகுதியினர் பெறுவதற்கு உரித்துடைய தாகவுள்ள வேறு நன்மைகளை அரசாங்கத்தின் ஒட்டுமொத்த வேதனம் மற்றும் சம்பளக் கொள்கை களினுள் காலத்திற்குக்காலம் தீர்மானித்தல்;

(எ) பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை மற்றும் ஆண்டு கணக்குகளைக் கருத்திற்கெடுத்தல் மற்றும் அது அவசியமெனக் கருதக்கூடியவாறான எவையேனும் திருத்தங்களுடன் அத்தகைய அறிக்கை மற்றும் கணக்கு களை அமைச்சருக்கு சமர்ப்பித்தல்;

(ஏ) பல்கலைக்கழகத்தின் வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள் மற்றும் ஆண்டு நிதிசார் ஒதுக்கீடுகளைத் தயாரித்தல் மற்றும் அமைச்சருக்கு அதனைச் சமர்ப்பித்தல்;

(ஐ) எந்தக் கருமங்கள் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் கட்டளைச் சட்டங்கள், நியதிச்சட்டங்கள் மற்றும் துணைவிதிகள் ஆக்கப்படவேண்டுமென தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அந்த எவையேனும் கருமங்கள் தொடர்பில் அத்தகைய விதிகள் கட்டளைச்சட்டங்கள், நியதிச்சட்டங்கள் மற்றும் துணை விதிகளை ஆக்குதல்;

(ஒ) பல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதியில் ஆட்களின் செயல்நிறைவேற்றுகையை மதிப்பீடுசெய்தல்;

(ஓ) பல்கலைக்கழகப் பணியாட்டொகுதியிலிருந்தோ அல்லது வேறெங்கேனும் இருந்தோ பரீட்சகர்களை நியமித்தல் மற்றும் அத்தகைய பரீட்சகர்களுக்குச் செலுத்தப்படக் கூடிய கட்டணங்களைத் தீர்மானித்தல்;

(ஔ) பல்கலைக்கழகத்தின் சார்பில் ஒப்பந்தங்களை செய்து கொள்ளுதல், நிறைவேற்றுதல் அல்லது இல்லாதாக்குதல் மற்றும் இலங்கையில் அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்வதில், பல்கலைக்கழகத்தினால் தோற்றுவிக்கப்பட்ட பயன்படுத்தப்படாத ஏதேனும் வருமானமுட்பட, பல்கலைக்கழகத்துக்குச் சொந்தமான எவையேனும் பணங்களை முதலீடு செய்தல் அல்லது அத்தகைய முதலீடுகளை வேறுபடுத்தல் அல்லது உடனடிச் செலவினத்துக்குத் தேவைப்படாத அத்தகைய பணங்களின் ஏதேனும் பாகத்தை அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வங்கியில் நிலையான வைப்புக்களில் இடுதல்;

(க) சிரேட்ட பேராசிரியர் பதவிகளை தாபித்தல், ஒழித்தல் அல்லது இடைநிறுத்தல்;

(ங) பேராசிரியர் பதவிகள், இணைப் பேராசிரியர் பதவிகள், சிரேட்ட விரிவுரையாளர் பதவிகள், விரிவுரையாளர் பதவிகள் மற்றும் அத்தகைய வேறு பதவிகளையும் தாபித்தல்;

(ச) ஏதேனும் கல்விசாராப் பதவியை தாபித்தல், ஒழித்தல் அல்லது இடைநிறுத்தம் செய்தல்;

(ஞ) பல்கலைக்கழகத்தின் ஏதேனும் கல்விசார் அல்லது கல்விசாராப் பணியாட்டொகுதியினருக்கு தேவைப்படும் தகைமைகளைத் தீர்மானித்தல்;

(ட) பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துக்காக, உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பகிரங்க மற்றும் தனியார் துறையுடன் உடலுழைப்புக் களையும் பங்காண்மைகளையும் தாபித்தல்;

(ண) ஆதரவூதியங்கள், புலமைப் பரிசில்கள், புலமைப் பொருளுதவிகள், உதவிப்பணங்கள், பதக்கங்கள் மற்றும் வேறு பரிசில்களை அளித்தல்;

(த) தீர்மானிக்கப்படக்கூடியவாறான வளாகங்கள், கல்லூரி கள், பீடங்கள் மற்றும் திணைக்களங்கள், நிலையங்கள் மற்றும் வேறு எவையேனும் நிறுவகங்கள், பாடசாலைகள் மற்றும் பிரிவுகளைத் தாபித்தல்;

(ந) பல்கலைக்கழகத்தின் அலுவலர்கள், பட்டதாரிகள் மற்றும் மாணவர்களின் கல்விசார் உடை மற்றும் அறிகுறி அடையாளங்களைத் தீர்மானித்தல்; அத்துடன்

(ப) பல்கலைக்கழகத்தின் எந்தத் தத்துவங்களின் பிரயோகம், இச்சட்டத்தில் அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் துணைநிலைச் சட்டவாக்கத்தில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்படவில்லையோ அத்தகைய எல்லா வேறு தத்துவங்களையும் பிரயோகித்தல்.

(2) சபை, இச்சட்டத்தின்கீழ், அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிக்கும், புரியும் மற்றும் நிறைவேற்றும் நோக்கத்துக்காக, இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் சபைக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது அதற்கு விதிக்கப்பட்ட அல்லது குறித்தளிக்கப்பட்ட அத்தகைய எவையேனும் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை துணைவேந்தருக்குக் கையளிக்கலாம்.

(3) சபை, அது தகுதியானதென கருதக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையிலான நிலையியற் குழுக்களையும், நிமித்தக் குழுக்களையும் அல்லது சபைகளையும் குறிப்பாக பின்வருவன வற்றையும் நியமிக்கலாம்:-

(i) தர உறுதிப்பாடு மற்றும் தராதர அங்கீகாரக் குழு;

(ii) ஒழுக்கவியல், உயர் பட்டங்கள் மற்றும் ஆராய்ச்சிக் குழு;

(iii) பாடவிதான மற்றும் மதிப்பீட்டுக் குழு;

(iv) லீவு மற்றும் அளிப்புக்கள் குழு;

(v) கைத்தொழில் - பல்கலைக்கழகப் பங்காண்மைக் குழு;

(vi) ஊடகத்துறை மற்றும் தகவற் சேவைகள் குழு;

(vii) நூலகக் குழு;

(viii) நிதிக்குழு;

(ix) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு;

(x) வதிவிட, ஒழுக்காற்று மற்றும் மாணவர் விவகாரச் சபை; அத்துடன்

(xi) பரீட்சைகள் சபை.

பணியாற்றுகை சார் உறுப்புகள்.

**20.** (1) பல்கலைக்கழகத்தின் பணியாற்றுகைசார் உறுப்புகள் பின்வருவனவாகவிருத்தல் வேண்டும்:-

(அ) தலைமையகங்கள்;

(ஆ) பேரவை;

(இ) மூதவை; அத்துடன்

(ஈ) பீடச் சபைகள்

(2) துணைவேந்தர், சபையின் அங்கீகாரத்துக்கு அமைய, பிரிவு 19 இன் உட்பிரிவு (2) இன்கீழ் அவருக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது அவருக்கு விதிக்கப்பட்ட அல்லது அவருக்கு குறித்தளிக்கப்பட்ட அத்தகைய எவையேனும் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும் நிறைவேற்று வதற்கும் பல்கலைக்கழகத்தின் பணியாற்றுகைசார் உறுப்புகளுக்கு கையளிக்கலாம்.

*பல்கலைக் கழகத்தின் தலைமை யகங்கள்.*

**21.** (1) பல்கலைக்கழகத்தின் தலைமையகங்கள் பின்வருபவர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) துணை வேந்தர்;

(ஆ) பிரதித் துணைவேந்தர் (பாதுகாப்பு மற்றும் நிருவாகம்);

(இ) கட்டளையிடும் அலுவலர் (நிருவாகம்);

(ஈ) படைத்துறைப் பணிப்பாளர்;

(உ) பதிவாளர்;

(ஊ) பொருளகர்; அத்துடன்

(எ) பல்கலைக்கழக சாஜன்ட் மேஜர்.

(2) தலைமையகங்கள், பல்கலைக்கழகத்தின் தொழிற்பாட்டு மற்றும் நிருவாகக் குழுவாதல் வேண்டும்.

*பேரவை.*

**22.** (1) (இதனகத்துப்பின்னர் “பேரவை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) பல்கலைக்கழகத்தின் பேரவை:-

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(i) துணைவேந்தர்;

(ii) வளாகங்களின் வளாகத் தலைவர்கள்;

(iii) பிரதித் துணைவேந்தர் (பாதுகாப்பு மற்றும் நிருவாகம்);

(iv) பிரதித் துணைவேந்தர் (கல்விசார்);

(v) இலங்கை ஆயுதந்தாங்கிய படைகளின் பயிற்சிக்கான பணிப்பாளர்கள்;

(vi) ஒவ்வொரு பீடத்தினதும் பீடாதிபதி;

(vii) படைத்துறைப் பணியாளர்;

(viii) பதிவாளர்; அத்துடன்

(ix) பொருளகர்.

(ஆ) பின்வரும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்:-

(i) துணைவேந்தரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் மூதவையின் வேறு இரண்டு உறுப்பினர்கள்;

(ii) பாதுகாப்பு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய அமைச்சின் பிரதிநிதியொருவர்;

(iii) கல்வி, உயர்தொழில், வர்த்தக, கைத்தொழில், அறிவியல் அல்லது நிருவாகத்துறைகளில் சிறப்புப்பணி ஆற்றியுள்ள ஆட்களிலிருந்து, பாதுகாப்பு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்; அத்துடன்

(iv) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்படுகின்ற பல்கலைக்கழகமொன்றிலிருந்து பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தவிசாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பிரதிநிதியொருவர்.

(2) (அ) பேரவையின் தவிசாளராகவிருக்க வேண்டிய துணைவேந்தர், பேரவையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைவகித்தல் வேண்டும். துணைவேந்தர் ஏதேனும் கூட்டத்திற்கு தலைமைவகிக்க இயலாதிருப்பின், பிரதித் துணைவேந்தர் (பாதுகாப்பு மற்றும் நிருவாகம்) அத்தகைய கூட்டத்துக்கு தலைமை வகித்தல் வேண்டும்.

(ஆ) பல்கலைக்கழகத்தின் பதிவாளர், பேரவையின் செயலாளராகப் பணியாற்றுதல் வேண்டும்.

(3) பேரவை, பல்கலைக்கழகத்தின் ஆலோசனைக் குழுவொன்றாகப் பணியாற்றுதல் வேண்டும்.

**23.** (1) பல்கலைக்கழகத்தின் மூதவை:- மூதவை.

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:

(i) துணைவேந்தர்;

(ii) வளாகங்களின் வளாகத் தலைவர்கள்;

(iii) பிரதித் துணைவேந்தர் (பாதுகாப்பு மற்றும் நிருவாகம்);

(iv) பிரதித் துணைவேந்தர் (கல்விசார்);

(v) தராதர அங்கீகார மற்றும் இணைந்துள்ள நிறுவனங்களின் தலைவர்கள்;

(vi) ஒவ்வொரு பீடத்தினதும் பீடாதிபதி;

(vii) படைத்துறைப் பணியாளர்;

(viii) ஒவ்வொரு பீடத்திலிருந்தும் இரண்டு சிரேட்ட பேராசிரியர்கள்;

(ix) பதிவாளர்;

(x) படையணிப்பிரிவு படைத்தலைவர்கள்;

(xi) கற்கைத்துறை ஒவ்வொன்றினதும் தலைவர்;

(xii) பாதுகாப்பு மற்றும் தந்திரோபாய கற்கைகள் பீடத்தின் பதவிநிலை அலுவலர் தரம் II ; அத்துடன்

(xiii) நூலகர்.

(ஆ) பின்வரும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்:-

(i) துணைவேந்தரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பீடங்களின் மொத்த எண்ணிக்கைக்குச் சமமாக உள்ளவாறாக அத்தகைய எண்ணிக்கையிலான இணைப் பேராசிரியர்கள் மற்றும் சிரேட்ட விரிவுரையாளர்கள்; அத்துடன்

(ii) துணைவேந்தரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பீடங்களின் மொத்த எண்ணிக்கைக்குச் சமமாக உள்ளவாறாக அத்தகைய எண்ணிக்கை யிலான விரிவுரையாளர்கள்.

(2) உட்பிரிவு (1) இன் (ஆ) என்னும் பந்தியின்கீழ் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், பெயர்குறித்த நியமனத் தேதியிலிருந்து கணக்கிடப்படும் இரண்டாண்டு காலப்பகுதியொன்றிற்கு பதவிவகித்தல் வேண்டும்.

(3) (அ) துணைவேந்தர் மூதவையின் தவிசாளராகவிருத்தல் வேண்டும்; அவர் மூதவையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதல் வேண்டும். தவிசாளர் ஏதேனும் கூட்டத்துக்கு தலைமை வகிக்க இயலாதிருப்பின், பிரதித் துணைவேந்தர் (பாதுகாப்பு மற்றும் நிருவாகம்) அத்தகைய கூட்டத்துக்கு தலைமை தாங்குதல் வேண்டும்.

(ஆ) பல்கலைக்கழகத்தின் பிரதிப் பதிவாளர், மூதவையின் செயலாளராகப் பணியாற்றுதல் வேண்டும்.

(4) மூதவை, பல்கலைக்கழகத்தின் கல்விசார் குழுவொன்றாகப் பணியாற்றுதல் வேண்டுமென்பதுடன், சபையின் அங்கீகாரத்துடன், அது தகுதியானதெனக் கருதக்கூடியவாறு அத்தகைய எண்ணிக்கையிலான நிமித்தக் குழுக்களை நியமித்தலும் வேண்டும்.

*பீடச் சபை.*

**24.** *(1) (அ) பல்கலைக்கழகத்தின் கல்விசார் கற்கைகள் பீடங்களின் பீடச்சபை பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-*

(i) *பீடத்தின் பீடாதிபதி;*

(ii) *பீடத்தின் சிரேட்ட பேராசிரியர்கள், பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், சிரேட்ட விரிவுரையாளர்கள் மற்றும் விரிவுரையாளர்கள்;*

(iii) *பந்தி (ii) இல் குறிப்பீடு செய்யப்பட்டவர்கள் தவிர்ந்த, பீடத்தில் போதனைகளைப் புகட்டும் நிரந்தர கல்விசார் பணியாட்டொகுதியின் இரண்டு உறுப்பினர்கள்;*

(iv) *பாதுகாப்பு மற்றும் தந்திரோபாய கற்கைகள் பீடத்தின் பீடாதிபதியின் பிரதிநிதியொருவர்;*

(v) *சிரேட்ட உதவிப் பதிவாளர்;*

(vi) *உதவி நூலகர்; அத்துடன்*

(vii) *பீடத்திற்கு இயைபான கற்கைப் பரப்புகளில் உள்ள சிறப்புமிக்க ஆட்களிலிருந்து சபையினால் நியமிக்கப்பட்ட, பல்கலைக்கழக பணியாட்டொகுதியின் உறுப்பினர்கள் அல்லாத மூன்றுக்கு மேற்படாத ஆட்கள்.*

*(ஆ) பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு மற்றும் தந்திரோபாய கற்கைகள் பீடத்தின் பீடச்சபை, பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-*

(i) *பீடத்தின் பீடாதிபதி;*

(ii) *பாதுகாப்புக் கற்கைகள் முறை மற்றும் தந்திரோபாயக் கற்கைகள் துறையின், துறைத் தலைவர்கள்;*

(iii) *படையணிப்பிரிவு படைத்தலைவர்கள்;*

(iv) பதவிநிலை அலுவலர் தரம் II;

(v) விளையாட்டு அலுவலர்;

(vi) உணவக முகாமையாளர்;

(vii) படையணி படைத்தலைவர்கள்; அத்துடன்

(viii) பயிற்சி ஆதரவு அலுவலர்

(2) பீடச் சபையொன்றின் நியமிக்கப்பட்ட எல்லா உறுப்பினர்களும், அவரது நியமனத் தேதியிலிருந்து கணக்கிடப்படும் இரண்டாண்டு காலப்பகுதியொன்றிற்கு பதவிவகித்தல் வேண்டும்.

(3) ஒவ்வொரு பீடத்தினதும் பீடாதிபதி, பீடச் சபையின் தவிசாளராதல் வேண்டும்; அவர் பீடச்சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதல் வேண்டும். பீடத்தின் பீடாதிபதி அத்தகைய ஏதேனும் கூட்டத்துக்கு தலைமைதாங்குவதற்கு இயலாதவிடத்து, துணைவேந்தர், அத்தகைய கூட்டத்துக்கு தலைமை தாங்குவதற்கு பீடச் சபையின் உறுப்பினரொருவரை பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்.

(4) (அ) சிரேட்ட உதவிப் பதிவாளர், பல்கலைக்கழகத்தின் கல்விசார் கற்கைகள் பீடங்களின் பீடச்சபையின் செயலாளராகப் பணியாற்றுதல் வேண்டும்.

(ஆ) பணியாட்டொகுதி அலுவலர் தரம் II பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு மற்றும் தந்திரோபாய கற்கைகள் பீடத்தின் பீடச் சபையின் செயலாளராகப் பணியாற்றுதல் வேண்டும்.

(5) துணைவேந்தர் மற்றும் பிரதித் துணைவேந்தர்கள் பீடச் சபையொன்றின் ஏதேனும் கூட்டத்திற்கு சமுகமளிப்பதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## பாகம் VI

### பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா

**25.** (1) பல்கலைக்கழகமானது, பட்டங்களை அளிக்கும் நோக்கத்துக்காக, சபையினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியில் அல்லது தேதிகளில் ஒவ்வோராண்டிலும் ஒரு தடவை பொதுப் பட்டமளிப்பு விழாவொன்றை நடாத்துதல் வேண்டும்:

*பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவை நடாத்துதல்.*

ஆயின், பல்கலைக்கழகமானது, சபை தீர்மானிக்கக்கூடிய வாறான விசேடபட்டமளிப்பு விழாவொன்றை வேறெந்த நேரத் திலும் நடாத்தலாம்.

(2) பட்டமளிப்பை நடாத்துவதற்கான நடவடிக்கைமுறை துணைவிதிகளினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

(3) சனாதிபதி சமுகமாகவிருக்கும் போது பட்டமளிப்பு விழா வுக்கு தலைமைதாங்குதல் வேண்டும். சனாதிபதி இல்லாதிருப் பின் வேந்தர் அத்தகைய பட்டமளிப்பு விழாவுக்குத் தலைமை தாங்குதல் வேண்டும் என்பதுடன் சனாதிபதி மற்றும் வேந்தர் ஆகிய இருவரும் இல்லாதிருப்பின் துணைவேந்தர் அத்தகைய பட்டமளிப்பு விழாவுக்கு தலைமைதாங்குதலும் வேண்டும்.

## பாகம் VII

### பல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதி

**26.** பல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதிக்கான நியமனம் ஒவ்வொன்றும், கட்டளைச் சட்டத்தினால் விதித்துரைக்கப் பட்டவாறாக ஆட்சேர்ப்பு மற்றும் நடவடிக்கைமுறை பற்றிய அத்தகைய திட்டங்களுக்கு இணங்க சபையினால் செய்யப்படுதல் வேண்டும்.

*சபையானது பல்கலைக் கழகத்தின் பணியாட் டொகுதியை நியமித்தல்.*

பல்கலைக் கழகத்தின் பணியாட் டொகுதியினது தகைமைகளைத் தீர்மானித்தல்.

**27**. பல்கலைக்கழகத்தின் எல்லா ஆசிரியர்கள் மற்றும் எல்லா கல்விசாரா பணியாட்டொகுதியினரின் தகைமைகள் மற்றும் அவர்களுக்கான ஊதியங்கள் சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்; அவை 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட பல்கலைக்கழகத்தினால் ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா பணியாட்டொகுதியினர் தொடர்பில் தீர்மானிக்கப்பட்ட அத்தகைய தகைமைகள் மற்றும் ஊதியங்களுக்குக் குறைந்ததாகவிருத்தலாகாது.

தகுதிகாண் நிலைக்காலப் பகுதிகளும் உறுதிப்படுத்து கையும்.

**28**. (1) ஆசிரியரொருவரின் பதவியொன்றிற்கான ஒவ்வொரு நியமனமும், சபையினால் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஒவ்வொரு நியமனமும் முதற் தடவையில், மூன்றாண்டுகளைக்கொண்ட தகுதிகாண்நிலைக்காலப் பகுதியொன்றிற்கானதாகவிருத்தல் வேண்டும்; இக்காலப்பகுதி கட்டளைச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்காக சபையால் நீடிக்கப்படலாம். தகுதிகாண்நிலைக் காலப்பகுதியின் முடிவில், நியமனமானது கட்டளைச்சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்டவாறான ஆட்சேர்ப்பின் தோதான திட்டங்களில் ஏற்பாடு செய்யப்பட்ட உறுதிப்படுத்துகை பற்றிய தேவைப்பாடுகளுக்கு அல்லது நிபந்தனைகளுக்கு இணங்க உறுதிப்படுத்தப்படலாம்:

ஆயின், நியமனமானது ஆசரியர் பதவியொன்றுக்காகவிருக்குமிடத்தும் நியமிக்கப்பட்டவர் சேர்க்கப்பட்டுள்ள வேறொரு அரசாங்க திணைக்களத்தில் அல்லது பகிரங்கத்துறை நிறுவனத்தில் ஆசிரியர் பதவியொன்றில் அல்லது ஆசிரியர் ஒருவருக்குச் சமமான பதவியொன்றில் முன்னரே உறுதிப்படுத்தப்பட்டுள்ளவிடத்தும் நியமனம் முதற் தடவையில் ஓராண்டைக் கொண்ட தகுதிகாண்நிலைக் காலப்பகுதியொன்றாகவிருத்தல் வேண்டும்.

(2) கல்விசாராப் பதவிகளுக்கான நியமனம் ஒவ்வொன்றும் சபையால் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஒவ்வொரு நியமனமும் முதற் தடவையில், மூன்றாண்டுகளைக் கொண்ட தகுதிகாண்நிலைக் காலப்பகுதியொன்றிற்கானதாக

விருத்தல் வேண்டும்; இக்காலப்பகுதி, கட்டளைச் சட்டத்தினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு சபையால் நீடிக்கப்படலாம். தகுதிகாண்நிலைக் காலப்பகுதியின் முடிவில், நியமனமானது கட்டளைச் சட்டத்தினால் விதித்து ரைக்கப்பட்டவாறான ஆட்சேர்ப்பின் தோதான திட்டங்களில் ஏற்பாடு செய்யப்பட்ட உறுதிப்படுத்துகை பற்றிய தேவைப் பாடுகளுக்கு அல்லது நிபந்தனைகளுக்கு இணங்க உறுதிப் படுத்தப்படலாம்:

ஆயின், நியமனமானது கல்விசாராப் பதவியொன்றிற்காக விருக்குமிடத்தும் நியமிக்கப்பட்டவர் சேர்க்கப்பட்டுள்ள வேறொரு திணைக்களத்தில் அல்லது பகிரங்கதுறை நிறுவனத்தின் கல்விசாராப் பதவியொன்றிற்குச் சமமான பதவியொன்றில் முன்னரே உறுதிப்படுத்தப்பட்டுள்ளவிடத்தும் நியமனம் முதற் தடவையில் ஓராண்டைக் கொண்ட தகுதிகாண்நிலைக் காலப்பகுதியொன்றாகவிருத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை) ஒருவரின் தகுதிகாண்நிலைக்கான காலப்பகுதி கட்டளைச் சட்டத்தினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியொன்றாகவிருத்தல் வேண்டும்.

*கல்விசாராப் பதவியொன்றை வகிக்கின்ற ஆசிரியர்களும் ஆட்களும் இளைப்பாறுதல்.*

**29.** (1) ஆசிரியர் பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட ஆசிரியர் பதவியை வகிக்கின்ற ஒருவர், அவர் அறுபது வயதைப் பூர்த்தி செய்யும் வரை அத்தகைய பதவியை வகித்தல் வேண்டும்:

ஆயின், அத்தகைய பதவியை வகிப்பவர் சபையினாலான விசாரணையொன்று முடிவுறாதுள்ள எந்நேரத்திலும் துர்நடத்தை, திறமையின்மை அல்லது கடமையிலான தவறுகை என்பவற்றுக்காக இடைநிறுத்தப்படலாமென்பதுடன் சபையி னால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானமொன்றின் மீது, அத்த கைய விசாரணையின் பின்னர் குற்றவாளியாகக் காணப்படின், பதவியிலிருந்து நீக்கவும்படலாம் அல்லது வலுக்கட்டாயமாக இளைப்பாற்றவும்படலாம்.

(2) பகிரங்க அலுவலர்களின் இளைப்பாறும் வயது தொடர்பான தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகள், அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகள் மற்றும் பகிரங்க சேவை ஆணைக்குழு விதிகள், பல்கலைக்கழகத்தில் ஏதேனும் கல்விசாராப் பதவியை வகிப்போரின் இளைப்பாற்று வயது தொடர்பாக ஏற்புடையற் பாலனவாதல் வேண்டும்;

(3) பிரிவு 28 இல் குறிப்பீடு செய்யப்பட்ட தகுதிகாண்நிலைக் காலப்பகுதியைப் பூர்த்திசெய்யுமுன்னர் -

(அ) ஆசிரியர் பதவியொன்றை வகிக்கின்ற ஆளொருவர் அறுபது வயதையடையுமிடத்து; அல்லது

(ஆ) கல்விசாராப் பதவியொன்றை வகிக்கின்ற ஆளொருவர், உட்பிரிவு (2) இல் குறிப்பீடு செய்யப்பட்ட தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள், அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகள் மற்றும் பகிரங்க சேவை ஆணைக்குழு விதிகளில் குறித்துரைக்கப்பட்ட இளைப்பாறும் வயதை யடையுமிடத்து,

அத்தகைய ஆள், அவர் அவ்வயதை எத்தேதியன்று அடைகின் றாரோ அத்தேதியிலிருந்து சேவையிலிருந்து இளைப்பாறி யுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

(4) பதவியிலிருந்து நீக்கப்படுகின்றவரும் அல்லது அவரது பதவியிலிருந்து வலுக்கட்டாயமாக இளைப்பாற்றப்படுகின்றவரும் அல்லது துர்நடத்தை, திறமையின்மை அல்லது கடமையிலான தவறுகை என்பவற்றுக்காக வேறுவகையில் தண்டிக்கப்படு கின்றவருமான பல்கலைக்கழகத்தில் ஒரு பதவியை வகிக்கின்ற வரான ஒவ்வொருவரும், அத்தகைய பதவிநீக்கம் அல்லது வலுக்கட்டாயமான இளைப்பாறுகை அல்லது வேறு தண்டனை என்பவற்றிற்கெதிராகச் சபைக்கு மேன்முறையீடு செய்யலாம்.

பல்கலைக் கழகத்தின் பணியாட் டொகுதிக்குப் பகிரங்க அலுவலர்களை நியமித்தல்.

**30.** (1) சபையின் வேண்டுகோளின் பேரில், பகிரங்க சேவையிலுள்ள அலுவலரொருவர், அவ்வலுவலரினதும், அவ்வலுவலர் எந்த அமைச்சினால் அல்லது அமைச்சின்கீழ் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளாரோ அந்த அமைச்சின் செயலாளரினதும், அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் மற்றும் பகிரங்க சேவை ஆணைக்குழுவினதும் சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் பதவியொன்றுக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்று சம்மதத்துடன் ஆசிரியரொருவராக நிரந்தரமாக நியமிக்கப் படலாம்.

(2) 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்கு வரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், பல்கலைக்கழகத்தின் ஆசிரியரொரு வரென்ற பதவிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படும் பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலருக்கும் அவர் தொடர்பாக வும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) அச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், பல்கலைக்கழகத்தின் ஆசிரியரொருவரென்ற பதவிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படும் பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங் களுடனும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங் கத்துக்குச் சேவையாற்றுவதற்கு உடன்பட்டு அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டுள்ள எவரேனுமாளைப் பல்கலைக்கழகம் தொழிலுக்கமர்த்துமிடத்து, அவ்வாளினால் பல்கலைக்கழகத்துக்கு ஆற்றப்படும் ஏதேனும் சேவைக்காலப்பகுதி, அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்கு ஆற்றப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

பணியாட் டொகுதியின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு.

**31.** தாபனவிதிக்கோவையின் ஏற்பாடுகளின் பொதுமைக்குப் பங்கமின்றி இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், விடயத்திற்கேற்ப (357 ஆம் அத்தியாயமான) தரைப் படைச் சட்டம், (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச்சட்டம், (359ஆம் அத்தியாயமான) வான்படைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் அவற்றின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், பல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதியின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு தொடர்பில் ஏற்புடையதாதல் வேண்டும்.

## பாகம் VIII

### நிதி

பல்கலைக் கழக நிதியம்.

**32.** பல்கலைக்கழகம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்; பின்வருவன அதனுள் வரவுவைக்கப்படுதல் வேண்டும்:-

(அ) பிரிவுகள் 33 மற்றும் 38 இன் கீழ் பாராளுமன்றத்தினால் அதன் பயன்பாட்டுக்காக வழங்கப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகள்;

(ஆ) எத்தகையதுமான ஏதேனும் மூலத்திலிருந்து நன்கொடைகள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையாகப் பல்கலைக்கழகத்தினால் பெறப்படக்கூடிய வாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகள்;

(இ) சபையால் அங்கீகரிக்கப்பட்டவாறு ஏதேனும் நோக்கத்துக்காக பல்கலைக்கழகத்துக்கு செலுத்தப்பட்ட கட்டணங்கள்;

(ஈ) பல்கலைக்கழகத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையின் செயல்நிறைவேற்றுகைக்குப் பதிலாக பல்கலைக்கழகத்திற்கு செலுத்தப்படக்கூடிய வாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகள்;

(உ) ஏதேனும் சேவையை வழங்குவதன் மூலம் பல்கலைக் கழகத்தினால் தோற்றுவிக்கப்பட்ட ஏதேனும் வருமானம்; அத்துடன்

(ஊ) இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதிக்கு அல்லது ஒழுங்குவிதிக்கு இணங்கப் பல்கலைக்கழகத் துக்குச் செலுத்தப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட வேறெவையேனும் கொடுப்பனவுகள்.

(2) இச்சட்டத்தின்கீழ் பல்கலைக்கழகம் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அதனால் உறப்பட்ட எல்லாச் செலவினங் களையும் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் பல்கலைக்கழகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

பல்கலைக் கழகத்துக்கு உதவி மானியக் கொடைகள்.

**33.** திறைசேரிச் செயலாளர், ஒவ்வொரு நிதியாண்டும் தொடங்கிய பின்னர் செயல்முறைக்குகந்ததாக இருக்கக்கூடிய வாறு விரைவாக, வருடாந்த ஒதுக்கீடு, குறைநிரப்பு வாக்கு என்ற வகையாக அல்லது வேறுவகையாக, பல்கலைக்கழகத்துக்கு உதவி மானியக்கொடையொன்றாகப் பாராளுமன்றத்தினால் வழங்கப் படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளைப் பல்கலைக்கழகத்துக்குச் செலுத்துதல் வேண்டும்.

வரவு செலவுத்திட்ட மதிப்பீடு களையும் வருடாந்த நிதி ஒதுக்கீடு களையும் சபை கவனத்திற் கொள்ளுதல்.

**34.** பிரிவு 35 இன் பந்தி (ஈ) கீழ் பொருளகரின் உதவியுடன் தயாரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள் மற்றும் வருடாந்த நிதி ஒதுக்கீடுகள் துணைவிதியி னால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதிக்கு முன்னர் சபையினால் கவனத்திற்கொள்ளப்படுதல் வேண்டும். சபையானது தகுதியானவை என அது கருதுகின்றவாறாக அத்த கைய மதிப்பீடுகளிலும் நிதி ஒதுக்கீடுகளிலும் அத்தகைய மாற்றங்களைச் செய்யலாமென்பதுடன் அவற்றை முடிவடைந்த நிதியாண்டுக்கான பல்கலைக்கழகத்தின் கணக்குகளுடன் சேர்த்து அமைச்சரிடம் சமர்ப்பித்தலும் வேண்டும்; அத்துடன் அமைச்சர், அவசியமென அவர் கருதுமிடத்து, அத்தகைய எவையேனும் மதிப்பீடுகளையும் நிதி ஒதுக்கீடுகளையும் திருத்தலாம்.

பொருளகரின் கடமைகள்.

**35.** பின்வருவன பல்கலைக்கழகத்தின் பொருளகரின் கடமையாதல் வேண்டும்:-

(அ) பல்கலைக்கழகத்தின் கணக்குகளை விதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் அத்தகைய முறையிலும் வைத்திருத்தல் மற்றும் பேணுதல்;

(ஆ) பல்கலைக்கழகத்தின் நிதியத்தினுள் செலுத்தப்பட்ட எல்லாப் பணங்களையும் பெறுதல் மற்றும் அத்தகைய பணங்களை முறையான கணக்குத் தலைப்புகளுக்கு வரவு வைத்தல்.

(இ) அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளையும் செய்தல்;

(ஈ) பல்கலைக்கழகத்தின் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளையும் வருடாந்த நிதி ஒதுக்கீடுகளையும் தயாரிப்பதில் சபைக்கு உதவுதல்; அத்துடன்

(உ) அவசியமானவிடத்து, இச்சட்டத்தின் பிரிவு 39 இன் கீழ் எவையேனும் குறைநிரப்பு மதிப்பீடுகளைத் தயாரித்தல்.

குறிப்பிட்ட நோக்கங்களுக்கான மானியக்கொடைகளிலிருந்தான வருமானத்துக்குத் தனியாகக் கணக்குக் காட்டப்படுதல்.

**36.** குறிப்பிட்ட நோக்கங்களுக்காக அளிக்கப்பட்ட மானியக் கொடைகளிலிருந்து அல்லது குறிப்பிட்ட குறிக்கோள்களுக்கான அறக்கொடைகளிலிருந்து பல்கலைக்கழகத்தினால் பெறப்பட்ட வருமானம் பல்கலைக்கழகத்தின் கணக்குகளில் தனித்தனியாகக் கணக்குக் காட்டப்படுதல் வேண்டும் என்பதுடன், பல்கலைக் கழகத்தின் பொது நோக்கங்களுக்காக அல்லது அத்தகைய மானியக்கொடைகள் அல்லது அறக்கொடைகள் எந்த நோக்கங் களுக்காக அல்லது குறிக்கோள்களுக்காக அளிக்கப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காக அல்லது குறிக்கோள்கள் அல்லாத வேறு எவையேனும் நோக்கங்களுக்காக அல்லது குறிக்கோள்களுக்காக அத்தகைய வருமானத்திலிருந்து கொடுப்பனவெதும் செலுத்தப் படுதலுமாகாது.

சபையானது வரவு செலவுத்திட்ட மதிப்பீடு களையும் வருடாந்த நிதி ஒதுக்கீடு களையும் ஏற்றுக் கொள்ளுதல்.

***37.*** சபையானது, தீர்மானத்தின் மூலம் பல்கலைக்கழகத்தின் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளையும், வருடாந்த நிதி ஒதுக்கீடு களையும், வருடாந்தக் கணக்குகளையும் பிரிவு 34 இன் கீழ் அமைச்சரிடம் அவை சமர்ப்பிக்கப்படமுன்னர், ஏற்றுக்கொள்ளு தல் வேண்டும்.

ஒரு வாக்கிலிருந்து இன்னொன்றுக்கு நிதிகளை கைமாற்றுதல்.

***38.*** சபை, அவசியமேற்படும் விடயத்தில், திறைசேரியின் எழுத் திலான அங்கீகாரத்திற்கு அமைய, வருடாந்த மதிப்பீடுகளின் ஒரு வாக்கிலிருந்து இன்னொன்றுக்கு நிதிகளைக் கைமாற்றலாம்.

குறைநிரப்பு மதிப்பீடுகள்.

***39.*** (1) அவசியமேற்படும் விடயத்திலும் எதிர்பாராச்செலவினம் எதனையும் ஈடுசெய்வதற்கெனவும் செலவினம் பற்றிய குறைநிரப்பு மதிப்பீடுகளைத் தயாரிப்பது பொருளகருக்கு எந்நேரத்திலும் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1) இன் கீழ் தயாரிக்கப்பட்ட குறைநிரப்பு மதிப்பீடுகள், அவற்றை ஏற்றுக்கொள்வதற்காகச் சபையிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், ஏற்றுக்கொள்ளப் பட்டவுடன், அடுத்துவரும் ஆண்டிற்கான வருடாந்த ஒதுக்கீட்டு டன் சேர்த்து அமைச்சருக்குக் கிடைக்கக்கூடியன வாக்கப்படுதலும் வேண்டும்.

(3) மீண்டுவரும் தன்மையினதான நிதிச் செலவினம், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப் பாட்டுடன் அளிக்கப்பட்ட அமைச்சரின் முன்னங்கீகாரமின்றி உறப்படுதலாகாது.

நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்.

***40.*** (1) பல்கலைக்கழகத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டா தல் வேண்டும்.

(2) பகிரங்க கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பாக அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், பல்கலைக்கழகத்தின் கணக்குகளினது கணக்காய் வுக்கும் அது தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளை வெளியிடுதல்.*

**41.** ஒவ்வொரு நிதியாண்டுக்கான பல்கலைக்கழகத்தின் கணக்குகள் கணக்காய்வு செய்யப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*வருடாந்தக் கணக்குகளும் கணக்காய்வாளர் தலைமை யதிபதியின் அறிக்கையும் அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்படுதல்.*

**42.** (1) பல்கலைக்கழகமானது, ஒவ்வொரு நிதியாண்டு தொடர்பிலும் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையைப் பெற்றதிலிருந்து மூன்று மாதங்களினுள், அத்தகைய அறிக்கையின் மீது சபையினால் தெரிவிக்கப்பட்ட எவையேனும் கருத்துரைகளை அத்தகைய அறிக்கை எக்கணக்குகள் பற்றிய கூற்றுத் தொடர்பானதோ அக்கணக்குகள் பற்றிய கூற்றுடன் சேர்த்து, அமைச்சருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(2) அமைச்சர், உட்பிரிவு (1) இன் கீழ் அவருக்கு அனுப்பி வைக்கப்பட்ட எல்லா ஆவணங்களினதும் பிரதிகளை, அத்தகைய ஆவணங்கள் எவ்வாண்டுடன் தொடர்பானவையோ அவ்வாண்டை அடுத்துவரும் ஆண்டின் முடிவுக்கு முன்னர் பாராளுமன்றத்தால் இடப்படுவதற்கு செய்வித்தல் வேண்டும்.

## பாகம் IX

### பொது ஏற்பாடுகள்

*பல்கலைக் கழகத்தின் ஏதேனும் அதிகாரசபை உறுப்பினர் களாக விருப்பதற்கான தகைமையீனம்.*

**43.** ஆளொருவர் பின்வருமாறிருப்பின் பல்கலைக்கழகத்தின் ஏதேனும் பணியாற்றுகைசார் உறுப்பின் அல்லது குழுவொன்றின் உறுப்பினரொருவராக அல்லது பல்கலைக்கழகத்தின் அலுவலரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்:-

(அ) பொறுப்புவிடுவிக்கப்படாத வங்கிமுறிந்தவராகவிருப்பின் அல்லது கடனிறுக்க வகையற்றவராக விருப்பின்;

(ஆ) ஒழுக்கக்கேட்டை உள்ளடக்கும் தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்;

(இ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் சித்த சுவாதீனமற்றவராகக் காணப்படின் அல்லது வெளிப்படுத்தப்படின்;

(ஈ) நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ, தாமாகவோ அல்லது அவரது சார்பில் வேறெவரேனுமாள் மூலமாகவோ அல்லது அவரது பயன்பாட்டுக்காக அல்லது நன்மைக்காக பல்கலைக்கழகத்தினால் அல்லது அதன் சார்பில் ஆக்கப்பட்டதும், அவரது தொழில் ஒப்பந்தம் அல்லாததுமான வேறு ஏதேனும் ஒப்பந்தத்தின் கீழ் ஏதேனும் உரிமையை அல்லது நன்மையை வைத்திருப்பின் அல்லது துய்ப்பின்;

(உ) பாராளுமன்ற உறுப்பினரொருவராக அல்லது மாகாணசபை உறுப்பினரொருவராக அல்லது உள்ளூரதிகாரசபை உறுப்பினரொருவராக இருப்பின் அல்லது வரின்;

(ஊ) துர்நடத்தைக்காக ஏதேனும் பணியாற்றுகைசார் உறுப்பின் உறுப்பாண்மையிலிருந்து அல்லது பல்கலைக்கழகத்தின் ஏதேனும் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருப்பின்;

(எ) தகுதியின்மை, சுகவீனம் அல்லது உடல் அல்லது உளக் குறைபாடு காரணமாக பணியாற்றுகைசார் உறுப்பு ஒன்றின் அல்லது குழுவின் உறுப்பினரொருவராகத் தொடர்ந்திருப்பதற்கு அல்லது தொடர்ந்து பதவி வகிப்பதற்குத் தகுதியற்றவராகக் காணப்படின்;

(ஏ) துர்நடத்தைக்கு அல்லது ஊழலுக்கு குற்றவாளியாகக் காணப்படின்; அல்லது

(ஐ) அவரது பதவியின் பாரிய அதிகாரத்துஷ்பிரயோகத்துக்குக் குற்றவாளியாகக் காணப்படின்.

*தேசிய பாதுகாப்பு நலன் கருதி தகவலைத் தேவைப் படுத்துவதற்கு சபைக்குள்ள தத்துவம்.*

**44.** (1) சபை, தேசிய பாதுகாப்பு நலன் கருதி ஏதேனும் துணைநிலைச்சட்டவாக்கத்தால் விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய தகவலை வழங்குவதற்கு பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒருவராக அல்லது ஊழியர் ஒருவராகச் சேர்க்கப்படுகின்ற ஆளை, விடயத்திற்கேற்ப அவ்வாளை நிரலிற் சேர்த்தலின் போது அல்லது அவ்வாளின் நியமனத்தின் போது தேவைப்படுத்தலாம்.

(2) உட்பிரிவு (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவர், அத்தகைய தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

பல்கலைக் கழகத்தின் அலுவலர்களும் சேவையாளர் களும் தண்டனைச் சட்டக்கோவை யின் கீழ் பகிரங்க சேவையாளர் களாகக் கருதப்படுதல்.

**45**. பல்கலைக்கழகப் பணியாட்டொகுதியின் எல்லா அலுவலர்களும் உறுப்பினர்களும் (19ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட்பட பல்கலைக்கழகம் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவன மொன்றாகக் கருதப்படுதல்.

**46**. பல்கலைக்கழகமானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்துக் குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

விருப்பத்தகாத ஆட்கள் சுற்றாடலினுள் பிரவேசிப்பதன் மீதான தடை.

**47**. (1) பல்கலைக்கழகத்தின் எவரேனும் அலுவலர், பணியாட்டொகுதி உறுப்பினர் அல்லது மாணவர் ஒருவர் தவிர, பல்கலைக்கழகத்தினுள் எவரேனுமாள் சமூகமளித்திருத்தல், துணைவேந்தரின் அபிப்பிராயத்தில் பல்கலைக்கழகத்தின் அல்லது அவர் மாணவர்களின் சேமநலத்துக்கு உகந்ததாக விராதவிடத்து, துணைவேந்தர் அல்லது அவர் சார்பாக எழுத்தில் அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அத்தகைய ஆளுக்கு கேட்கப்படுவதற்கு சந்தர்ப்பமொன்றை அளித்த பின்னர், அறிவித்தலொன்றின் மூலம், பல்கலைக் கழகத்தின் சுற்றாடலினுள் அல்லது அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறாக அதன் அத்தகைய பாகத்தினுள் அத்தகைய ஆள் பிரவேசிப்பதனை அல்லது தங்கியிருப்பதனைத் தடைசெய்கின்ற அத்தகைய அறிவித்தலை அவரது கைப்பட்ட எழுத்தின் மூலம் அத்தகைய ஆளுக்குச் சேர்ப்பிக்கலாம். அத்தகைய தடை, சபையினால் இல்லாதொழிக்கப்படும் வரை வலுவில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

(2) சான்றிதழொன்றில் பெயர்குறிப்பிடப்பட்ட எவரேனுமாள், உட்பிரிவு (1)இன் ஏற்பாடுகளுக்கிணங்க, பல்கலைக்கழகத்தின் சுற்றாடலினுள் அல்லது அதன் ஏதேனும் பாகத்தினுள் பிரவேசிப் பதற்கு அல்லது தங்கியிருப்பதற்குத் தடைசெய்யப்பட்டுள் ளாரென்ற பொருள்பட துணைவேந்தரின் கைப்பட்ட அச்சான்றிதழ், முரணாக எண்பிக்கப்படும் வரை அத்தகைய சான்றிதழில் கூறப்பட்ட நிகழ்வுகளின் சான்றாக ஏதேனும் நீதிமன்றத்தால் பெறப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டு மென்பதுடன் துணைவேந்தரால் வழங்கப்பட்ட சான்றித ழொன்றாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(3) பல்கலைக்கழகத்தின் சுற்றாடலினுள் அல்லது அதன் பாகத்தினுள் பிரவேசிப்பதற்கு அல்லது தங்கியிருப்பதற்கு உட்பிரிவு (1) இன் ஏற்பாடுகளின் கீழ் தடைசெய்யப்பட் டுள்ளவரும், நியாயமான காரணமின்றி அத்தகைய தடைக்கு முரணாக அத்தகைய சுற்றாடலினுள் அல்லது அதன் பாகத் தினுள் பிரவேசிக்கின்றவரும் அல்லது தங்கியிருக்கின்றவருமான எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவரினாலான சுருக்க முறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் அத்தகைய சுற்றாடலினுள் அல்லது அதன் பாகத்தினுள் அவர் பிரவேசித்துள்ள அல்லது தங்கியுள்ள ஒவ்வொரு நாள் அல்லது அதன் பாகத்தினுள் பாகம் தொடர்பில் பத்தாயிரம் ரூபாவான குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

(4) உட்பிரிவு (3) இன் கீழான தவறொன்று 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்துக்குட்பட பிடியாணையின்றிக் கைதுசெய்தகு மற்றும் பிணையில் விடுபடத்தகு தவறொன்றாதல் வேண்டும்.

**48.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, பின்வரும் எல்லாக்கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் சபையினால் நியதிச்சட்டங்கள் ஆக்கப்படலாம் — *நியதிச் சட்டங்கள்.*

(அ) சபை, தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளை துணைவேந்தருக்கும் பணியாற்றுகைசார் உறுப்பு களுக்கும் கையளித்தல்;

(ஆ) வேறுவகையாக ஏற்பாடு செய்யப்படாதவிடத்து, பல்கலைக்கழகத்தின் ஏதேனும் பணியாற்றுகைசார் உறுப்பின் வெற்றிடங்களை நிரப்புதல் மற்றும் அதனைக் கூட்டுதல்;

(இ) அளிக்கப்படவேண்டிய பட்டங்களையும் வேறு கல்விசார் சிறப்புக்களையும் தீர்மானித்தல்;

(ஈ) கௌரவப்பட்டங்கள் அல்லது வேறு சிறப்புகளை அளித்தல்;

(உ) எந்த ஆதரவூதியங்கள், புலமைப்பரிசில்கள், புலமைப் பொருளுதவிகள், உதவிப்பணங்கள், பதக்கங்கள் மற்றும் வேறு பரிசில்களுக்கு நிதிகள் அல்லது ஆதனம் எத்தகையதுமான எம்முறையிலும் வழங்கப்படலாமோ அந்த ஆதரவூதியங்கள், புலமைப்பரிசில்கள், புலமைப் பொருளுதவிகள், உதவிப் பணங்கள், பதக்கங்கள் மற்றும் வேறு பரிசில்களைத் தாபித்தல் மற்றும் அளித்தல்; அத்துடன்

(ஊ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எக்கருமங்களுக்காக நியதிச்சட்டங்கள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப் படுகின்றதோ அல்லது தேவைப்படுத்தப்படுகின்றதோ அவ்வெல்லாக் கருமங்கள்.

(2) உட்பிரிவு (1) இன்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு நியதிச்சட்டமும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் வர்த்தமானியில் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு தேதியன்று வலுவுக்கு வருதலும் வேண்டும்.

துணைவிதிகள்.

**49.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் சபையினால் துணைவிதிகள் ஆக்கப்படலாம்:-

(அ) பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புகளை வழங்குவதற்காகச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கற்கைநெறிகள்;

(ஆ) எந்நிபந்தனைகளுக்கமைய மாணவர்கள் கற்கைநெறிகளுக்கு சேர்ப்பிக்கப்பட வேண்டுமோ அந்நிபந்தனைகள் மற்றும் பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புக்கள் என்பவற்றுக்கு விதித்துரைக்கப்பட்ட பரீட்சைகள்;

(இ) கற்கைநெறிகள், பரீட்சைகள் மற்றும் பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புக்களை அளிப்பதற்காக அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள்;

(ஈ) பல்கலைக்கழகத்தின் பல்வேறு பணியாற்றுகைசார் உறுப்புகள் மற்றும் குழுக்களுக்கு பிரதிநிதிகளைப் பெயர் குறித்துநியமித்தல் சம்பந்தமான எல்லாக்கருமங்கள்;

(உ) பரீட்சகர்களை நியமிப்பதற்கான நிபந்தனைகள் மற்றும் முறை, அவர்களின் கடமைகள், அவர்களுக்குச் செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள் மற்றும் பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் பரீட்சைகளின் தராதரங்களைப் பேணுதல்; அத்துடன்

(ஊ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எக்கருமங்களுக்காகத் துணைவிதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றதோ அல்லது தேவைப்படுத்தப்படுத்தப்படுகின்றதோ அவ்வெல்லாக் கருமங்கள்.

(2) பல்கலைக்கழகத்திலான கற்பித்தல் அல்லது பரீட்சைகள் என்பன தொடர்பான அல்லது சம்பந்தமான ஏதேனும் கருமம் தொடர்பிலானவொரு துணைவிதி, அத்தகைய துணைவிதியின் வரைவொன்று மூதவையினால் முதலில் தயாரிக்கப்பட்டு பேரவையூடாக சபையிடம் சமர்ப்பிக்கப்படும்வரை, சபையினால் ஆக்கப்படுதலாகாது.

(3) சபையினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு துணைவிதியும் அதன்கண் குறித்துரைக்கப்படவேண்டியவாறான அத்தகைய தேதியன்று வலுவுக்கு வருதல் வேண்டும்.

**50.** (1) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட எக்கருமம் தொடர்பிலும் அல்லது ஒழுங்கு விதிகள் ஆக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எக்கருமம் தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம். ஒழுங்கு விதிகள்.

(2) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய ஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியான அளவு விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும் அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு இல்லாதொழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**51.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, சபை – விதிகள்.

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எக்கருமங்களுக்காக விதிகள் ஆக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப் படுகின்றதோ அக்கருமங்கள் எல்லாம் தொடர்பிலும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின்கீழ் பல்கலைக்கழகத்தின் பணியாற்று கைசார் உறுப்புகள் அவைகளின் கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்கு அவைகளை இயலச் செய்வதற்கென ஏற்பாடு செய்யப்படுவதற்கு எக்கருமங்களுக்காக விதிகள் ஆக்கப்படுவதற்கு தேவைப்படுத்தப் படுகின்றதோ அக்கருமங்கள் எல்லாம் தொடர்பிலும்

விதிகளை ஆக்கலாம்.

*கட்டளைச் சட்டங்கள்.*

**52.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, சபை இச்சட்டத்தின்கீழ் எக்கருமங்களுக்காக கட்டளைச் சட்டங்கள் ஆக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அவ்வெல்லாக் கருமங்கள் தொடர்பில் கட்டளைச் சட்டங்களை ஆக்கலாம்.

*கனியப் பொருட்கள் குடியரசின் தனிச்சொத்தாக இருத்தல்.*

**53.** பல்கலைக்கழகத்துக்கு அவ்வாறு உரித்தாக்கப்பட்ட காணியில், காணியின்கீழ் அல்லது அதன் மேல் ஏதேனும் கனியப்பொருளுக்கான ஏதேனும் உரிமை குடியரசின் தனிச் சொத்தாக இருக்கின்றதாகவும் இருக்கவேண்டியதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையன வாகா.*

**54.** திருத்தப்பட்டவாறாக 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள், இச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகத்துக்கு அல்லது அது தொடர்பில் ஏற்புடையனவாதலாகாது.

*குறித்தசில சட்டங்களின் ஏற்புடைமை.*

**55.** திருத்தப்பட்டவாறாக 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சேமலாப நிதியச்சட்டம், திருத்தப்பட்டவாறாக 1980 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம் மற்றும் திருத்தப்பட்டவாறாக 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகள் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா பணியாட்டொகுதியினரின் இளைப்பாற்று நன்மைகள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*நீக்கங்கள் மற்றும் பேணல்கள்.*

**56.** (1) 1981 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக்கழகச் சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது.

(2) அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அத்தகைய நீக்கம் பயனுறும் தேதியை நியமித்தல் வேண் டும்.

(3) அத்தகைய நீக்கம் எவ்வாறிருப்பினும், நீக்கப்பட்ட தேதிக்கு முற்போந்த நாளன்று -

(அ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட வேந்தர் பதவியை வகிக்கும் ஆள், அத்தகைய நீக்கப்பட்ட தேதியிலிருந்து இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட வேந்தராகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அவரது பதவிக்காலம் முடிவடையும் வரை பல்கலைக் கழகத்தின் வேந்தராகத் தொடர்ந்து பதவி வகித்தலும் வேண்டும்;

(ஆ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட படைத் தலைவர் பதவியை வகிக்கும் ஆள், அத்தகைய நீக்கப்பட்ட தேதியிலிருந்து இச்சட்டத்தின்கீழ் நியமிக் கப்பட்ட துணைவேந்தராகக் கருதப்படுதல் வேண்டு மென்பதுடன், அவரது பதவிக்காலம் முடிவடையும் வரை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகத் தொடர்ந்து பதவி வகித்தலும் வேண்டும்; அத்துடன்

(இ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள், அத்தகைய நீக்கப்பட்ட தேதியிலிருந்து இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், எந்நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அவர்கள் உரித்துடையவர்களாக உள்ளார்களோ அந் நியதிகளிலும் நிபந்தனைகளிலும் பார்க்க அனுகூலம் குறைந்தனவாகவிராத நியதிகளின் மீது பல்கலைக்கழக பணியாட்டொகுதியின் உறுப்பினர் களாகத் தொடர்ந்திருத்தலும் வேண்டும்.

(4) மேற்கூறப்பட்ட சட்டத்தின் நீக்கம் எவ்வாறிருப்பினும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதன் பின்னரும் -

(அ) நீக்கப்பட்ட சட்டத்தின் பிரிவு 20(1) இன்கீழ் ஆக்கப்பட்ட உரித்தாக்கற் கட்டளையின்கீழ் உரித்தாக்கப்பட்டு, 1982, பெப்ரவரி 2ஆந் தேதிய 182 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக்கழகத்தின் எல்லா அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனமும் பல்கலைக்கழகத்துக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தினால் உறப்பட்டவையும் அதனால் அல்லது அதனுடன் செய்துகொள்ளப்பட்டவையும் அதனால் அல்லது அதனுடன் செய்யப்படுவதற்கு ஈடுபாடுள்ளவையும் அல்லது உடன்பட்டுக்கொள்ளப் பட்டவையும் பயனுறும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளவையுமான எல்லாத் தனிசுகள், கடப்பாடுகள் மற்றும் சொத்துக்களும் பொறுப்புக்களும் எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் எல்லாக் கருமங்கள் மற்றும் காரியங்களும் பல்கலைக்கழகத்தால் உறப்பட்ட தனிசுகள், கடப்பாடுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களாகவும் அதனால் அல்லது அதனுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகளாகவும் அதனால் அல்லது அதனுடன் செய்யப்படுவதற்கு ஈடுபடுத்தப்பட்ட அல்லது உடன்பட்டுக்கொள்ளப்பட்ட எல்லாக் கருமங்கள் மற்றும் காரியங்களாகவும் கருதப்படுதல் வேண்டும்;

(இ) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலைப் பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் நிதியத்துக்கு வரவுக்கிருக்கும் எல்லாப் பணத்தொகைகளும், இச்சட்டத்தின் பிரிவு 32 இனால் தாபிக்கப்பட்ட நிதியத்துக்கு அத்தேதியிலிருந்து பயனுறும் வகையில் கைமாற்றப்பட்டனவாதல் வேண்டும்;

(ஈ) நியமிக்கப்பட்ட தேதிக்கு முற்போந்த நாளன்று ஏலவேயுள்ள ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் எல்லா உரிமைகளும் அக்கறைகளும் பொறுப்புக்களும் பல்கலைக் கழகத்தின் உரிமைகள், அக்கறைகள் மற்றும் பொறுப்புக்களாகக் கருதப்படுதல் வேண்டும்;

(உ) இலங்கையில் ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதுள்ள, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலைப் பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தினால் அல்லது அதற்கு எதிராகத் தொடுக்கப்பட்ட எல்லா துடர்ச்சிகளும், குற்ற வழக்குகளும், மேன்முறையீடுகளும் அல்லது வேறு சட்ட நடவடிக்கைகளும், பல்கலைக்கழகத்தினால் அல்லது அதற்கு எதிராகத் தொடுக்கப்பட்ட துடர்ச்சி களாகவும், குற்றவழக்குகளாகவும், மேன்முறையீடுகளாகவும் அல்லது வேறு சட்ட நடவடிக்கைகளாகவும் தொடருதல் வேண்டும்;

(ஊ) ஏதேனும் வழக்கில், விடயத்தில், வழக்குநடவடிக்கையில் அல்லது காரியத்தில் ஏதேனும் நீதிமன்றத்தினால் அல்லது நியாயசபையினால் அல்லது வேறு குழுவினால் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகத்திற்கு சார்பாக அல்லது அதற்கு எதிராக செய்துகொள்ளப்பட்ட அல்லது ஆக்கப் பட்ட ஏதேனும் தீர்வை, கட்டளை அல்லது அளிப்பு, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பல்கலைக்கழகத்துக்குச் சாதகமாக அல்லது அதற்கு எதிராக செய்துகொள் ளப்பட்ட அல்லது அளிப்பாகக் கருதப்படுதல் வேண்டு மென்பதுடன் அதற்கிணங்க வலுவுறுத்தப்படுதலும் வேண்டும்;

(எ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட எல்லா கட்டளைச்சட்டங்களும், நியதிச்சட்டங்களும், துணை விதிகளும், விதிகளும், ஒழுங்குவிதிகளும் அவை இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக

இருந்தால் ஒழிய, அத்தகைய கட்டளைச் சட்டங்கள், நியதிச் சட்டங்கள், துணைவிதிகள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் வரை, அவை இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டன என்றாற் போன்று நடைமுறையில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

(5) மேற்குறிப்பிட்ட சட்டத்தின் நீக்கம் எவ்வாறிருப்பினும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதன் பின்னரும் -

(அ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தில், அறிவித்தலில், அறிவிப்பில், சாசனத்தில், ஒப்பந்தத்தில், தொடர்பாடலில் அல்லது வேறு ஆவணத்தில் "ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக் கழகம்" என்பதற்கான குறிப்பீடு ஒவ்வொன்றும், இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட "ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்புப் பல்கலைக் கழகம்" என்பதற்கான குறிப்பீடொன்றாக வாசிக்கப் படுதலும் பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்;

(ஆ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தில், அறிவித்தலில், அறிவிப்பில், ஒப்பந்தத்தில், தொடர்பாடலில் அல்லது வேறு ஆவணத்தில் "ஜெனரல் சேர் ஜோன் கொத்தலா வலை பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைச் சபை" என்பதற்கான குறிப்பீடு ஒவ்வொன்றும், இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட "ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்புப் பல்கலைக் கழகத்தின் சபை" என்பதற்கான குறிப்பீடொன்றாக வாசிக்கப்படுதலும் பொருளமைத்துக் கொள்ளப்படு தலும் வேண்டும்;

(இ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தில், அறிவித்தலில், அறிவிப்பில், ஒப்பந்தத்தில், தொடர்பாடலில் அல்லது வேறு ஆவணத்தில் "ஜெனரல் சேர் ஜோன் கொத்தலா வலை பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் படைத்

தலைவர்" என்பதற்கான குறிப்பீடு ஒவ்வொன்றும், இச்சட்டத்தின் பிரிவு 11இன் உட்பிரிவு (1) இன்கீழ் நியமிக்கப்பட்ட "ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர்" என்பதற்கான குறிப்பீடொன்றாக வாசிக்கப் படுதலும் பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

(ஈ) கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக்கழகம், கொத்தலாவலபுர என்பதற்கான 1978 ஆம் ஆண்டு யூலை 11 ஆந்தேதிய 1292ஆம் இலக்க உறுதியிலும் மற்றும் 1980 ஆம் ஆண்டு ஏப்பிறல் 7 ஆம் தேதிய 1389 ஆம் இலக்க உறுதியிலுமான ஏதேனும் குறிப்பீடு, இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்புப் பல்கலைக் கழகத்திற்கான குறிப்பீடொன்றாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

சிரமங்களை நீக்குதல்.

**57.** அமைச்சர், இச்சட்டத்தின் நோக்கங்கள் சம்பந்தமாக ஒன்றில் பொதுவாக அல்லது ஏதேனும் விசேட கருமம் தொடர்பாக சபையின் விதப்புரையின் மேல் மற்றும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட எந்த விசேட அல்லது எதிர்பாராச் சூழ்நிலைகளுக்காக ஏற்பாடு எதுவும் அல்லது பயனுள்ள ஏற்பாடு எதுவும் செய்யப்படவில்லையோ அந்த ஏதேனும் விசேட அல்லது எதிர்பாராச் சூழ்நிலைகளை ஏற்பாடு செய்யும் கருத்துடன், அவர் அவசியம் எனக் கருதக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணிப்புக்களையும் வழங்கலாம்.

குறித்தசில அசையும் ஆதனங்கள் தொடர்பான விசேட ஏற்பாடுகள்.

**58.** அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து செயல் முறைக்குகந்ததாக விரைவாக, 1980 ஆம் ஆண்டு ஏப்பிரல் 7 ஆந்தேதிய 1389 ஆம் இலக்க உறுதிக்கான அட்டவணை II இல் விவரிக்கப்பட்டு கொழும்பு சிறீ ராகவன் நாராயணசாமியினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட, காலஞ்சென்ற சேர் ஜோன் லயனல் கொத்தலா

வலையினால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கு கைமாற்றப்பட்ட மற்றும் பல்கலைக்கழகத்துக்கு உரித்தாக்கப்பட்ட அசையும் ஆதனங்களின் நிரல் ஒன்றை வெளியிடுதல் வேண்டும்.

பொருள் கோடல்

**59**. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய:-

"இலங்கை ஆயுதந்தாங்கிய படைகள்" என்பது -

(அ) இலங்கைத் தரைப்படை; அல்லது

(ஆ) இலங்கைக் கடற்படை; அல்லது

(இ) இலங்கை வான்படை.

"துணைவிதி" என்பது, இச்சட்டத்தின் பிரிவு 49 இன் கீழ் சபையினால் ஆக்கப்பட்ட துணைவிதி ஒன்று எனப் பொருள்படும்;

"பட்டம்" என்பது, பல்கலைக்கழகத்தினால் அளிக்கப்படும் இளமானி மற்றும் பட்டப்பின் பட்டங்கள் ஆகிய இரண்டும் எனப் பொருள்படும்.

"திப்புளோமா" என்பது பல்கலைக்கழகத்தினால் அளிக்கப் படும் உயர் திப்புளோமாக்கள் மற்றும் பட்டப்பின் படிப்பு திப்புளோமாக்களை உள்ளடக்குகின்றது;

"தாபனவிதிக்கோவை" என்பது, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை எனப் பொருள்படும்;

"பணியாற்றுகைசார் உறுப்பு" என்பது, இச்சட்டத்தின் பிரிவு 20 இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் உறுப்பு எனப் பொருள்படும்;

“இராணுவப் பயிற்சி நிறுவகங்கள்” என்பது, இலங்கை ஆயுதந்தாங்கிய படைகளின் இராணுவப்பயிற்சி நிறுவகங்கள் எனப் பொருள்படும்;

“அமைச்சர்” என்பது, பாதுகாப்பு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் எனப் பொருள்படும்;

“கல்விசாராப் பணியாட்டொகுதி” என்பது, பல்கலைக் கழகத்தின் ஆசிரியர்கள் தவிர்ந்த பணியாட் டொகுதியின் எல்லா உறுப்பினர்கள் எனப் பொருள் படும்; அத்துடன் அது கல்விசார் உதவி பணியாட் டொகுதியினர், நிருவாகப் பணியாட்டொகுதியினர் மற்றும் எழுதுவினைஞர்கள் மற்றும் இணைந்த சேவைகளையும் உள்ளடக்குகிறது;

“கட்டளைச் சட்டம்” என்பது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் சபையினால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளைச் சட்டம் எனப் பொருள்படும்;

“பிரதான நிறைவேற்று மற்றும் நிருவாக அலுவலர்” என்பது, பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் எனப் பொருள் படும்;

“ஒழுங்குவிதி” என்பது, இச்சட்டத்தின் பிரிவு 50 இன்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி எனப் பொருள்படும்;

“விதி” என்பது, இச்சட்டத்தின் பிரிவு 51 இன்கீழ் சபையினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி எனப் பொருள்படும்;

“சிரேட்ட உதவிப் பதிவாளர்” என்பது, உதவிப் பதிவாளர் ஒருவரை உள்ளடக்குதல் வேண்டும்;

“நியதிச் சட்டம்” என்பது, இச்சட்டத்தின் பிரிவு 48 இன்கீழ் சபையினால் ஆக்கப்பட்ட ஏதேனும் நியதிச்சட்டம் எனப் பொருள்படும்;

*"நிலையியற் கட்டளைகள்"* என்பது, துணைவேந்தரினாலான பணிப்பின் மேல் காலத்துக்குக் காலம் வழங்கப்பட்ட நிருவாகப் பணிப்புரைகள் எனப் பொருள்படும்;

*"துணைநிலைச் சட்டவாக்கம்"* என்பது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளைச் சட்டம், நியதிச் சட்டம், துணைவிதி, ஒழுங்குவிதி அல்லது விதி எனப் பொருள்படும்;

*"ஆசிரியர்"* என்பது, சிரேட்ட பேராசிரியர் ஒருவர், பேராசிரியர், இணைப் பேராசிரியர், சிரேட்ட விரிவுரையாளர் மற்றும் விரிவுரையாளர் (தகுதிகாண் நிலை) எனப் பொருள்படும்; அத்துடன் அது நூலகர் ஒருவர், பிரதி நூலகர் மற்றும் உதவி நூலகரை உள்ளடக்குகின்றது; அத்துடன்

*"பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு"* என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் பிரிவு 2 இன்கீழ் தாபிக்கப்பட்ட ஆணைக்குழு எனப் பொருள்படும்.

**60.** இச்சட்டத்தின் சிங்கள், தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்.